செந்தமிழறிஞர்கள்

ISBN : 978-81-686424-0-9

(108)



ச வையாபுரிப்பிள்ளை

பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்

NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in



https://www.annacentenarylibrary.org/pages/view/62.%20%E0%AE%9A.%E0%AE%B5%E0%AF%88%E0%AE%AF%E0%AE%BE%E0%AE%AA%E0%AF%81%E0%AE%B0%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%BE%E0%AE%B0%E0%AF%8D

செந்தமிழ்சிற்பிகள்

ச.வையாபுரியார் (1891 - 1956)



அறிமுகம்

ச. வையாபுரிப்பிள்ளை (எஸ். வையாபுரிப்பிள்ளை, அக்டோபர் 12, 1891- பெப்ரவரி 17,1956) இருபதாம் நூற்றாண்டின் முதன்மை தமிழ் ஆராய்ச்சியாளர்களில் ஒருவர். தமிழ் நூற்பதிப்புத் துறையில் சிறந்த பதிப்பாசிரியராக விளங்கியவர். தமிழில் சிறந்த புலமை உள்ளவர்; ஆய்வுக கட்டுரையாளர், திறனாய்வாளர், கால மொழி ஆராய்ச்சியாளர், மொழி பெயர்ப்பாளர், சொற்பொழிவாளர், கதை,கவிதைகள் புனையும் திறம் படைத்தவர் எனப் பல்முகப் பரிமாணங்களைக் கொண்டவர். சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட பேரகராதியின் ஆக்கக் குழுத் தலைவராகச் செயற்பட்டவர்.

வாழ்க்கைச் சுருக்கம்

வையாபுரிப்பிள்ளை, நெல்லை மாவட்டத்தில் உள்ள சிக்கநரசய்யன்பேட்டை என்ற ஊரில் 1891ஆம் ஆண்டு அக்டோபர் 12 ஆம் தேதி சரவணப்பெருமாள் - பாப்பம்மாள் தம்பதிக்குப் பிறந்தார். இவர் பாளையங்கோட்டை புனித சவேரியர் பள்ளியிலும், திருநெல்வேலி ம.தி.தா. இந்துக் கல்லூரியிலும் பிறகு சென்னை கிறிஸ்துவக் கல்லூரியிலும் படித்துப் பட்டம் பெற்றார். அந்த ஆண்டு சென்னை மாகாணத்திலேயே தமிழில் மிக அதிக மதிப்பெண்கள் பெற்று "சேதுபதி தங்க மெடல் (பதக்கம்)" பெற்ற பெருமைக்குரியவர் ஆனார்.

வழக்குரைஞராகப் பணி

தமிழில் ஆர்வம் அதிகமிருந்தும் வையாபுரிப் பிள்ளை திருவனந்தபுரம் சட்டக் கல்லூரியில் சேர்ந்து படித்து வழக்குரைஞரானது மட்டுமல்லாமல், ஏழு ஆண்டுகள் வழக்குரைஞராகவும் பணிபுரிந்தார். பிறகு மூன்று ஆண்டுகள் திருநெல்வேலியிலும் வழக்குரைஞராகப் பணியாற்றினார். வையாபுரிப் பிள்ளையின் நெல்லை வாழ்க்கையில் அவருக்கு நெருங்கிய நண்பர்களாக,"இரசிகமணி" டி. கே. சிதம்பரநாத முதலியார், நீலகண்ட சாஸ்திரியார், பேராசிரியர் சாரநாதன், பெ. அப்புசாமி போன்றோர் இருந்திருக்கிறார்கள்.

தமிழாய்வு

வழக்குரைஞராகப் பணியாற்றி வந்த காலத்தில், வையாபுரிப் பிள்ளை எழுதி, வெளிவந்த பல கட்டுரைகளும் இலக்கிய ஆய்வுகளும் அவரை அறிஞர்கள் மத்தியில் பேசப்பட வைத்தன. உ.வே.சாமிநாதய்யருக்குப் பிறகு பழந்தமிழ் இலக்கியங்களைத் தொகுத்து, ஆய்வு செய்து வெளியிட்ட பெருமை எஸ். வையாபுரிப் பிள்ளையைத் தான் சாரும். ஓலைச் சுவடிகளைப் பதிப்பித்ததுடன் நிற்காமல் அந்த இலக்கியங்களுக்குக் கால நிர்ணயம் செய்ததிலும் வையாபுரிப் பிள்ளைக்குப் பெரும் பங்கு உண்டு.

வையாபுரிப்பிள்ளை 1926 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகம் உருவாக்கி வந்த தமிழ் அகராதியின் (ஏழு தொகுதிகள்) பதிப்பாசிரியர் பொறுப்பேற்றார்.1936 ஆம் ஆண்டு முதல் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவராக விளங்கினார். 1946 வரை அப்பணியில் சிறப்பாகச் செயல்பட்டு, பல ஆராய்ச்சியாளர் களை உருவாக்கினார்.

வையாபுரிப் பிள்ளை திருவிதாங்கூர் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவராக இருந்த காலத்தைப் பொற்காலம் என்று கூறுவார்கள். சுமார் நான்கு ஆண்டுகள் அப்பதவியில் வையாபுரிப் பிள்ளை இருந்த காலகட்டத்தில்தான் மலையாள மொழி லெக்சிகன் (சொற்களஞ்சியம்) பதிப்பிக்கப்பட்டது. அதன் உறுப்பினாரகவும் பணியாற்றிய பெருமை வையாபுரிப் பிள்ளைக்கு உண்டு. இந்தக் காலகட்டத்தில் தான், பின்னாளில் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் முதல் துணைவேந்தராக விளங்கிய வ. ஐ. சுப்பிரமணியம், ஆய்வு மாணவராக வையாபுரிப் பிள்ளையிடம் பணியாற்றி அவரது வாரிசு என்ற பெயரையும் பெற்றார்.

இரா. பி. சேதுப்பிள்ளையைப் போலவே கம்பனின் கவிநயத்தில் தன்னைப் பறிகொடுத்த வையாபுரிப் பிள்ளை,"இரசிகமணி" டி.கே.சியுடன் இணைந்து திருநெல்வேலியில் கம்பன் கழகத்தை உருவாக்கியதில் பெரும்பங்கு வகித்தார்.

மகாகவி சுப்பிரமணிய பாரதி மற்றும், வ. உ. சிதம்பரம்பிள்ளை ஆகிய இருவரிடமும் வையாபுரிப் பிள்ளைக்கு நெருங்கிய அறிமுகம் இருந்தது. தனது சிறைவாசத்துக்குப் பிறகு, அரசியல் வாழ்வில் வெறுப்புற்றிருந்த வ. உ. சி., ஏட்டிலிருந்த இளம்பூரணரின் தொல்காப்பிய உரையைப் பதிப்பிக்கும் நோக்கத்தோடு படியெடுத்தார். அதனை எஸ்.வையாபுரிப் பிள்ளையிடம் காட்டி செப்பம் செய்தார். வையாபுரிப் பிள்ளையையும் அதன் பதிப்பாசிரியராகத் தன்னுடன் இருக்குமாறு கேட்டதையும், ஆனால் இவரோ நீங்களே பதிப்பாசிரியராக இருந்தால் போதும் என்று

மறுத்து விட்டதாகவும் அந்த உரைப் பதிப்பின் முன்னுரையில் வ.உ.சி நன்றியுடன் குறிப்பிட்டிருக்கிறார்.

அவரது வீட்டில் இருந்த நூலகத்தில் மட்டும் 2,943 புத்தகங்கள் இருந்தன. அதுமட்டுமல்லாமல் ஆங்கிலம், தமிழ், பிரெஞ்சு, ஜெர்மன், மலையாளம் போன்ற மொழிகளிலான குறிப்புகளும், ஓலைச்சுவடிகளும் நூற்றுக்கணக்கில். அவை அனைத்தையும் கொல்கத்தாவில் இருந்த தேசிய நூலகத்துக்கு நன்கொடையாக அளித்து விட்டார் வையாபுரிப் பிள்ளை. நாற்பதுக்கும் அதிகமான நூல்களையும் நூற்றுக்கணக்கான ஆய்வுகளையும் கட்டுரைகளையும் எழுதிக் குவித்தவர் அவர். மனோன்மணியம் உரையுடன் தொடங்கி 1955 இல் நாலாயிர திவ்யப் பிரபந்தத்தை உரையுடன் பதிப்பித்தது வரை தமிழுக்குப் பெரும் தொண்டு ஆற்றினார். கம்பராமாயணத்துக்கு உரை எழுதிப் பதிப்பிக்க வேண்டும் என்கிற அவரது அவா மட்டும் நிறைவேறாமலே போய்விட்டது.

விமர்சனங்கள்

தேவநேயப் பாவாணர் போன்றவர்கள், வையாபுரிப் பிள்ளை தமிழ் இலக்கியங்களின் காலத்தை சரியாக கணிக்கவில்லை என்றும், கிறிஸ்துவுக்கு முற்பட்ட தமிழ் இலக்கியத்தைப் பிற்பட்ட காலத்தது என்று கூறுவதாகவும் கண்டித்தனர். தமிழின் பழம் பெருமைக்கு எதிரானவர் என்று அவரை திராவிடக் கட்சிகள் கடுமையாக விமர்சித்திருந்தன.

மறைவு

வையாபுரிப் பிள்ளை 1956ஆம் ஆண்டு பிப்ரவரி 17ஆம் தேதி தனது 65வது வயதில் இயற்கை எய்தினார்.

இயற்றிய நூல்கள்

1930 - ஆராய்ச்சியுரைத் தொகுதி-1, ஆசிரியர் வெளியீடு

1944 - சிறுகதை மஞ்சரி, தினமணி வெளியீடு

1946 - Research in Dravidian Language, Madras Premier Co., Madras

1947 - இலக்கியச் சிந்தனைகள், பாரி நிலையம்

1949 - தமிழர் பண்பாடு, தமிழ்ப் புத்தகாலயம்

1950 - கம்பன் ஆராய்ச்சிப் பதிப்பு, கம்பன் கழகம், காரைக்குடி

1951 - உரைமணிமாலை, ஆசிரியர் பதிப்பு

1952 - இலக்கிய தீபம், பாரி நிலையம்

1952 - இலக்கிய உதயம் (பகுதி 2), தமிழ்ப் புத்தகாலயம்

1954 - இலக்கிய மணிமாலை, தமிழ்ப் புத்தகாலயம்

1955 - கம்பன் காவியம், தமிழ்ப் புத்தகாலயம்

1956 - இலக்கணச் சிந்தனைகள், பாரி நிலையம்

1956
- திராவிட மொழிகளில் ஆராய்ச்சி, தமிழ்ப் புத்தகாலயம், இரண்டாம் பதிப்பு

1956 - History of Tamil Language & Literature, NCBH

1956 - சொற்கலை விருந்து, பாரி நிலையம்

1957 - காவியகாலம், தமிழ்ப் புத்தகாலயம்

1958 - இலக்கிய விளக்கம், தமிழ்ப் புத்தகாலயம்

1958 - ராஜி

1959 - தமிழ்ச் சுடர்மணிகள், பாரி நிலையம், மூன்றாம் பதிப்பு

1959 - அகராதி நினைவுகள், தமிழ்ப் புத்தகாலயம்

1960 - தமிழின் மறுமலர்ச்சி, பாரி நிலையம், நான்காம் பதிப்பு

பதிப்பித்த நூல்கள்

மனோன்மணியம், 1922

துகில்விடு தூது, 1929

நாமதீப நிகண்டு, 1930

அரும்பொருள் விளக்க நிகண்டு, 1931

களவியற்காரிகை, 1931

கம்பராமாயணம்-யுத்த காண்ட1-3 படலம்), 1932

குருகூர் பள்ளு, 1932

திருக்குருங்குடி அழகிய நம்பி உலா, 1932

தினகர வெண்பா, 1932

நெல்விடு தூது, 1933

தொல்காப்பியம்-(பொருளதிகாரளம, இளம்பூரணம்), 1933

திருமந்திரம் (சேர்ந்து பதிப்பித்தது), 1933

திருமுருகாற்றுப்படை (சேர்ந்து பதிப்பித்தது, புதிய உரையுடன்), 1933

கம்பராமாயணம்-பால காண்டம் (1-7படலம்), 1933

பூகோள விலாசம், 1933

திருப்பணி மாலைகள் (தென்திருப்பேரை, திருக்கோளூர்),1933

மூப்பொந்தொட்டி உலா, 1934

பொதிகை நிகண்டு, 1934

இராஜராஜதேவர் உலா, 1934

தொல்காப்பியம்-பொருளதிகாரம் (நச்சினார்க்கினியம்),1934

இராமலிங்கேசர் மீது பணவிடு தூது, 1934

மதுரைக் கோவை, 1934

தெய்வச்சிலையார்விறலிவிடு தூது, 1936

புறத்திரட்டு, 1938

கயாதரம், 1939

சங்க இலக்கிய பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும்), 1940

சீவக சிந்தாமணி, 1941

சாத்தூரர் நொண்டி நாடகம், 1941

நவநீதப் பாட்டியல் - உரையுடன், 1943

திருமுருகாற்றுப்படை-பழைய உரை, 1943

நான்மணிக்கடிகை, 1944

இன்னா நாற்பது, 1944

திரிகடுகமும் சிறுபஞ்ச மூலமும், 1944

இனியவை நாற்பது, 1949

இராமப்பய்யன் அம்மானை, 1950

முதலாயிரம், 1955

திருவாய்மொழி

கொண்டல் விடு தூது

முக்கிய நூல்கள்

காவிய காலம்

கம்பன் காவியம்

இலக்கிய உதயம்

இலக்கணச் சிந்தனைகள்

தமிழ்ச் சுடர்மணிகள்

பதிப்பித்தவை

மனோண்மணியம்

நாமதீப நிகண்டு

பொதிகை நிகண்டு

தொல்காப்பியம் பொருளதிகாரம்

கம்பராமயணம் பாலகாண்டம்

திருவாய்மொழி

(😊)(😊)(😊) ᘓᘓᘓᘓᘓ (😊)(😊)(😊)

ச. வையாபுரிப் பிள்ளை (1891–1956) இருபதாம் நூற்றாண்டின் மிகச்சிறந்த தமிழ் அறிஞர், அகராதியியலாளர் மற்றும் ஆராய்ச்சியாளர் ஆவார். சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகராதியின் (Tamil Lexicon) பதிப்பாசிரியராகவும், தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவராகவும் பணியாற்றிய இவர், சங்க இலக்கியங்கள்,

காவியங்கள் மற்றும் சிற்றிலக்கியங்களைப் பதிப்பித்து, ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல எழுதியுள்ளார்.

ச. வையாபுரிப் பிள்ளை பற்றிய முக்கிய தகவல்கள்:

- பிறப்பு: அக்டோபர் 12, 1891, நெல்லை மாவட்டம் சிக்கநரசய்யன்பேட்டையில் பிறந்தார்.
- பணி: வழக்கறிஞராகத் தன் வாழ்க்கையைத் தொடங்கி, பின் தமிழ் இலக்கியப் பணியில் முழுமையாகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.
- பங்களிப்பு: சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதியின் பதிப்பாசிரியராக 7 தொகுதிகளை வெளியிடுவதில் முக்கியப் பங்காற்றினார்.
- ஆராய்ச்சி முறை: இலக்கியங்களை வெறும் புகழ்ச்சியாகப் பார்க்காமல், வரலாற்றுப் பின்னணி, மொழியியல் மற்றும் அறிவியல் அடிப்படையில் ஆராய்ந்தவர்.
- நூல்கள்: இலக்கியச் சிந்தனைகள், தமிழ்ச்சுடர் மணிகள், கம்பன் காவியம் போன்றவை இவரது முக்கியப் படைப்புகள்.
- சிறப்பு: தமிழ் நூற்பதிப்புத் துறையில், கையெழுத்துப் பிரதிகளை ஒப்பிட்டு, சரியான பாடங்களை நிலைநிறுத்துவதில் (Textual Criticism) முன்னோடியாகத் திகழ்ந்தார்.
- வையாபுரிப் பிள்ளை அவர்கள், தமிழ் இலக்கியங்களை நுணுக்கமாக ஆராய்ந்து, புதிய உண்மைகளை வெளிக்கொணர்ந்த அறிஞர்.

ஆசிரிய வாழ்க்கை

எஸ்.வையாபுரிப்பிள்ளை சென்னை பல்கலைகழகத்திலும் திருவிதாங்கூர் பல்கலைகழகத்திலும் பேராசிரியராகப் பணியாற்றிய காலத்தில் மிகச்சிறந்த மாணவர்கள் அவருக்கு அமைந்தனர். அவர்கள்

வையாபுரிப்பிள்ளை சிந்தனை மரபு என்று சொல்லத்தக்க ஓர் ஆசிரிய-மாணவ வரிசையை உருவாக்கினார்கள்.

வையாபுரிப்பிள்ளை மரபு

1. மொழி இன பற்றுகளும் பெருமிதங்களும் அற்ற புறவயமான முறைமைகளை முன்வைக்கும் ஆய்வுமுறை,
2. பிறமொழிகளின் வரலாறுகளுடன் இணைத்து இலக்கிய வரலாற்றை ஆராய்தல்,
3. பிற அறிவுத்துறைகளை முழுமையாக பயன்படுத்திக்கொள்ளுதல்


என்னும் மூன்று அடிப்படைகள் கொண்டது இந்த சிந்தனை மரபின் பார்வை.

முதன்மை மாணவர்கள்

- பேரா. வ.ஐ. சுப்பிரமணியம் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தர் மொழியியல் அறிஞர்
- ஏ.எஸ். நாராயணசாமி பி.ஓ.எல் (Treatment of Nature in Sangam Polity)
- திருமதி. ஜீவா செல்லப்பா பி.ஏ (The Manners and Customs of Ancient Tamils)
- செல்வி.கே. ஞானாம்பாள் எம். ஏ. எம்.லிட் (Domestic life in Ancient Tamizhakam)
- ஜி. சுப்பிரமணிய பிள்ளை எம்ஏ பி.எல் (A Study of Allusions in Sangam Literature) (இவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துமிழ்த்துறைத் தலைவராக விளங்கியவர்)
- மு. அருணாசலம் எம்.ஏ
- ஏ.வி. மயில்வாகனன் பி.ஏ (ஆனர்ஸ்) இலங்கை (Development of Prose in Tamil)
- க.பொ.இரத்தினம் பி.ஓ,எல், பி.ஏ (இலங்கை) (Development of Tamil Prosody)

- ஏ. கிருஷ்ணமூர்த்தி பி.ஓ.எல் (A Study of Sangam vocabulary)
- மு. சண்முகம் பிள்ளை (Tolkappiyars influence on Tamil Language and Literature)
- ஏ.ஆனந்தா பி.ஓ.எல் இலங்கை (Life of the Ancient Tamils)
- எஸ். சேதுகாவலன் பி.ஓ.எல் இலங்கை (Principles and History of Literary Criticism)

இலக்கியவாழ்க்கை



எஸ்.வையாபுரிப்பிள்ளை ஆய்வுநூல்

திருவனந்தபுரத்தில் வழக்கறிஞர் பணியில் இருந்த காலத்திலேயே வையாபுரிப் பிள்ளை தமிழ் இலக்கியம் மற்றும் வரலாறு பற்றிய கட்டுரைகளை எழுதி வந்தார். இக்காலகட்டத்தில் கவிமணி தேசிகவினாயகம் பிள்ளையின் தொடர்பு ஏற்பட்டது. சுவடிகள், கல்வெட்டுகளை ஆராய்வதற்கான அடிப்படைப் பயிற்சியைப் பெற்றார்.

எஸ்.வையாபுரிப் பிள்ளையின் தனிக்கட்டுரைகளின் தொகுப்புகளாகிய தமிழ்ச் சுடர்மணிகள், தமிழின்

மறுமலர்ச்சி ஆகியவை அவருடைய முதன்மையான நூல்கள் என்றும் தமிழிலக்கியத்தின் மிகச்சிறந்த நூல்களில் சில என்றும் கருதப்படுகின்றன. ஆய்வாளர்கள் மட்டுமின்றி நவீன இலக்கியவாசகர்களும் இந்நூல்களை தமிழிலக்கியச் சாதனைகளாக கருதுகின்றனர்.

பேரகராதி

1926-ல் வையாபுரிப்பிள்ளை சென்னைப் பல்கலைக்கழகம் உருவாக்கி வந்த தமிழ் அகராதியின் (ஏழு தொகுதிகள்) பதிப்பாசிரியர் பொறுப்பேற்றார். தமிழில் உருவான முதல் பேரகராதி இது. இன்றும் தமிழின் அடிப்படை நூலாக விளங்குகிறது. (பார்க்க சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி)

வையாபுரிப் பிள்ளை திருவிதாங்கூர் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவராக இருந்தபோது மலையாள மொழி பேரகராதி பதிப்பிக்கப்பட்டது.

கம்பன் கழகம்

நெல்லையில் வாழ்ந்தபோது டி.கே.சிதம்பரநாத முதலியாருடன் இணைந்து திருநெல்வேலியில் கம்பன் கழகத்தை உருவாக்கினார். மீ.ப.சோமு, நீதிபதி மு.மு. இஸ்மாயில், பேரா.அ.சீனிவாசராகவன், பக்ஷிராஜ ஐயங்கார் போன்றவர்கள் அதில் ஈடுபட்டனர். மர்ரே எஸ். ராஜம் நிறுவனம் பதிப்பித்த கம்பராமாயண நூலை இவ்வமைப்பு பிழைதிருத்தி, பாடபேதம் நோக்கி வெளியிட்டது

பதிப்பு வாழ்க்கை

வையாபுரிப்பிள்ளை தமிழ் பதிப்பியக்கத்தின் முன்னோடிகளில் ஒருவர். சிற்றிலக்கியங்கள், நிகண்டுகள், நாட்டாரிலக்கியங்கள் ஆகியவை அவரால் பதிப்பிக்கப்பட்டன. வையாபுரிப் பிள்ளை பதிப்பித்த 45 நூல்களில் இலக்கியம் / இலக்கணம் 5, சிற்றிலக்கியங்கள் 13, நிகண்டுகள் 6, நாட்டுப்புற இலக்கியம் 1, பிற 20.

வையாபுரிப்பிள்ளை மிகமிக தீவிரமாக ஆய்வுமுறைமையை கடைப்பிடிப்பவர். அவர் தன் கண்ணால் மூலச்சுவடியை பார்க்காமல் நூலை பதிப்பித்ததில்லை. ஒன்றுக்கு மேற்பட்ட சுவடிகள் இன்றியும் நூலை பதிப்பித்ததில்லை (சுவடிகள் இல்லை என்பதனால் சித்தர்பாடல்களை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை) கால ஆராய்ச்சியின் போது ஒரு நூலின் அகச்சான்று, புறச்சான்று இரண்டையும் முறைப்படிக் கொள்ளுதல், இலக்கணவழக்கு, சாஸ்திரக்குறிப்புகள், குறிப்பிட்ட நூலின் வரிகளை மேற்கோள் காட்டல் போன்ற முறைகளைப் பயன்படுத்தினார்.

வையாபுரிப்பிள்ளை தன் வீட்டில் இருந்த நூலகத்தில் மட்டும் 2,943 புத்தகங்களையும், ஆங்கிலம், தமிழ், பிரெஞ்சு, ஜெர்மன், மலையாளம் போன்ற மொழிகளிலான குறிப்புகளையும், ஓலைச்சுவடிகளையும் வைத்திருந்தார். அவர் மறைவுக்குப்பின் அவை கொல்கத்தாவில் இருந்த தேசிய நூலகத்துக்கு நன்கொடையாக அளிக்கப்பட்டன

இலக்கிய நண்பர்கள்

எஸ். வையாபுரிப் பிள்ளை கல்விக்காலம் முதலே தமிழின் மறுமலர்ச்சிக்காலப் பேரறிஞர்களுடன் தொடர்பிலும் உரையாடலிலும் இருந்தார். வையாபுரிப் பிள்ளை மிகக்குறைவாக உரையாடுபவர் (அவ்வகையில் அவர் கவிமணி தேசிகவினாயகம் பிள்ளைக்கு நேர் எதிரானவர்) என்று நினைவுப்பதிவுகள் குறிப்பிடுகின்றன. ஆனால் அவர் திருவனந்தபுரம், திருநெல்வேலி, சென்னை என்று வாழ்ந்த எல்லா ஊர்களிலும் மிக விரிவான நண்பர்குழுவுடனேயே இருந்திருக்கிறார். இலக்கிய அமைப்புகளில் பங்கெடுத்து விவாதங்களை முன்னெடுப்பது அவருக்கு மிக உவப்பானது. வையாபுரிப்பிள்ளையை அவரை சூழ்ந்திருந்த அறிஞர்கள், அவர் உருவாக்கிய அறிஞர்கள் ஆகியோருடன் இணைத்து ஒரு அறிவுத்தொகை என அணுகுவதே சரியானது. அவர் பெரும்பாலும் அதன் மையமென திகழ்ந்தார். வையாபுரிப் பிள்ளையை தவிர்த்து கவிமணி தேசிகவினாயகம் பிள்ளையையோ, கே.ஏ.நீலகண்ட சாஸ்திரியையோ ஆராய முடியாது.

வையாபுரிப்பிள்ளையின் இலக்கிய நண்பர்களில் முக்கியமானவர்கள்

- மனோன்மணியம் பெ.சுந்தரம் பிள்ளை
- ஆர்.கே.சண்முகம் செட்டியார்
- சுவாமிநாத பிள்ளை (சட்டக் கல்லூரி நண்பர்)
- பெ.நா.அப்புசாமி (பள்ளிநண்பர்)
- கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி (திருநெல்வேலி இந்துக்கல்லூரியில் உடன் பயின்றவர்)
- பி.ஸ்ரீ. ஆச்சார்யா (திருநெல்வேலி இந்துக்கல்லூரியில் உடன் பயின்றவர்)
- கவிமணி தேசிகவினாயகம் பிள்ளை (அப்போது மகாராஜா பெண்கள் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் தமிழாசிரியர்)
- கே.என். சிவராஜ பிள்ளை (வையாபுரிப்பிள்ளையின் நெருங்கிய உறவினர்).
- கெ.என்.குமரேச பிள்ளை (கம்பராமாணச் சொற்பொழிவாளர், கெ.என்.சிவராஜ பிள்ளையிள் தம்பி)
- இசையரசு தி. இலக்குமண பிள்ளை (தமிழிசை அறிஞர். இசைப்பாடலாசிரியர்)
- ஹரிஹர சாஸ்திரி (திருவிதாங்கூர் அரசாங்கத் தொன்னூல் நிலையத்தில் பணியாற்றியவர்)
- பண்டித முத்துசாமிப் பிள்ளை (தமிழன் பத்திரிகையின் ஆசிரியர்)
- பி.எஸ்.நடராச பிள்ளை (மனோன்மணியம் சுந்தரனாரின் மகன்)
- திவான்பகதூர் கோவிந்தப்பிள்ளை (திருவனந்தபுரம் உயர்நீதி மன்றத்தில் நீதிபதியாகப் பணியாற்றியவர். திருக்குறளை மலையாளத்தில் மொழிபெயர்த்த இருமொழி அறிஞர்).
- எம்.சி நாராயண பிள்ளை-மலையாள அறிஞர்
- ஏ.வி.சுப்பிரமணிய ஐயர் (தமிழின் தொடக்ககால இலக்கிய விமர்சகர். இந்து ஆங்கில இதழின் நெல்லை நிருபர்)
- டி.கே.சிதம்பரநாத முதலியார்
- வித்துவான்.மு.சண்முகம் பிள்ளை (ஏறத்தாழ 15 ஆண்டுகள் பேராசிரியரோடு இணைந்து பணிகளில் உதவினார்)

https://keetru.com/index.php/2010-06-24-04-31-11/ungal-noolagam-jun23/45325-2023-06-20-22-02-01

வையாபுரிப் பிள்ளை தமிழுக்கு எதிரானவரா?

சு.நரேந்திரன்

எஸ். வையாபுரிப் பிள்ளை, (12 அக்டோபர் 1891 - 17 பிப்ரவரி 1956) இருபதாம் நூற்றாண்டின் முதன்மைத் தமிழ் ஆராய்ச்சியாளர்களில் ஒருவர். தமிழ் நூற்பதிப்புத் துறையில் சிறந்த பதிப்பாசிரியராக விளங்கியவர். தமிழில் சிறந்த புலமை உள்ளவர்; ஆய்வுக் கட்டுரையாளர், திறனாய்வாளர், கால மொழி ஆராய்ச்சியாளர், மொழி பெயர்ப்பாளர், சொற்பொழிவாளர், கதை, கவிதைகள் புனையும் திறம் படைத்தவர் எனப் பன்முகப் பரிமாணங்களைக் கொண்டவர். சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட பேரகராதியின் ஆக்கக் குழுத் தலைவராகச் செயற்பட்டவர். வழக்குரைஞராகவும் பணிபுரிந்தார். பிறகு மூன்று ஆண்டுகள் திருநெல்வேலியில் வழக்குரைஞராகப் பணியாற்றினார். வையாபுரிப் பிள்ளையின் நெல்லை வாழ்க்கையில் அவருக்கு நெருங்கிய நண்பர்களாக, “இரசிகமணி” டி.கே.சிதம்பரநாத முதலியார், நீலகண்ட சாஸ்திரியார், வ.உ.சி. பேராசிரியர் சாரநாதன், பெ.அப்புசாமி போன்றோர் இருந்திருக்கிறார்கள்.



தமிழாய்வு

தொடக்க காலத்தில் சட்டக்கல்லூரியில் படித்த பிறகு வழக்குரைஞராகப் பணியாற்றி வந்த காலத்தில், வையாபுரிப் பிள்ளை எழுதி வெளிவந்த பல கட்டுரைகளும் இலக்கிய ஆய்வுகளும் அவரை அறிஞர்கள் மத்தியில் பேசப்பட வைத்தன. உ.வே.சாமிநாதய்யருக்குப் பிறகு பழந்தமிழ் இலக்கியங்களைத் தொகுத்து, ஆய்வு செய்து வெளியிட்ட பெருமை வையாபுரிப் பிள்ளையைத் தான் சாரும். ஓலைச் சுவடிகளைப் பதிப்பித்ததுடன் நிற்காமல் அந்த இலக்கியங்களுக்குக் கால நிர்ணயம் செய்ததிலும் வையாபுரிப் பிள்ளைக்குப் பெரும் பங்கு உண்டு.

வையாபுரிப்பிள்ளை 1926 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகம் உருவாக்கி வந்த தமிழ் அகராதியின் (ஏழு தொகுதிகள்) பதிப்பாசிரியர் பொறுப்பேற்றார். 1936 ஆம் ஆண்டு முதல் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவராக விளங்கினார். 1946 வரை அப்பணியில் சிறப்பாகச் செயல்பட்டு, பல ஆராய்ச்சியாளர்களை உருவாக்கினார்.

வையாபுரிப் பிள்ளை திருவிதாங்கூர் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவராக இருந்த காலத்தைப் பொற்காலம் என்று கூறுவார்கள். சுமார் நான்கு ஆண்டுகள் அப்பதவியில் வையாபுரிப் பிள்ளை இருந்த காலகட்டத்தில்தான் மலையாள மொழி லெக்சிகன் (சொற்களஞ்சியம்) பதிப்பிக்கப்பட்டது. அதன் உறுப்பினராகவும் பணியாற்றிய பெருமை வையாபுரிப் பிள்ளைக்கு உண்டு. இந்தக் காலகட்டத்தில் தான், பின்னாளில் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் முதல் துணைவேந்தராக விளங்கிய வ.ஐ.சுப்பிரமணியம் ஆய்வு மாணவராக வையாபுரிப் பிள்ளையிடம் பணியாற்றி அவரது வாரிசு என்ற பெயரையும் பெற்றார்.

இரா.பி.சேதுப்பிள்ளையைப் போலவே கம்பனின் கவிநயத்தில் தன்னைப் பறிகொடுத்த வையாபுரிப் பிள்ளை, “இரசிகமணி” டி.கே.சியுடன் இணைந்து திருநெல்வேலியில் கம்பன் கழகத்தை உருவாக்கியதில் பெரும்பங்கு வகித்தார்.

மகாகவி சுப்பிரமணிய பாரதி மற்றும் வ.உ.சிதம்பரம் பிள்ளை ஆகிய இருவரிடமும் வையாபுரிப் பிள்ளைக்கு நெருங்கிய அறிமுகம் இருந்தது. தனது சிறைவாசத்துக்குப் பிறகு, அரசியல் வாழ்வில் வெறுப்புற்றிருந்த வ.உ.சி., ஏட்டிலிருந்த இளம்பூரணரின் தொல்காப்பிய உரையைப் பதிப்பிக்கும் நோக்கத்தோடு படியெடுத்தார். அதனை எஸ்.வையாபுரிப் பிள்ளையிடம் காட்டி செப்பம் செய்தார். வையாபுரிப் பிள்ளையையும் அதன் பதிப்பாசிரியராகத் தன்னுடன் இருக்குமாறு கேட்டதையும், ஆனால் இவரோ நீங்களே பதிப்பாசிரியராக இருந்தால் போதும் என்று மறுத்து விட்டதாகவும் அந்த உரைப் பதிப்பின் முன்னுரையில் வ.உ.சி நன்றியுடன் குறிப்பிட்டிருக்கிறார்.

பேராசிரியர் ச.வையாபுரிப்பிள்ளை தமிழியல் ஆய்வைத் தமது வாழ்நாள் பணியாக மேற்கொண்டவர். தாம் மேற்கொண்ட ஆய்வில் உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் உழைத்தவர். போற்றுதலுக்கும் தூற்றுதலுக்கும் இடையே அவரது ஆய்வுப்பணி நிகழ்ந்தது.

பேராசிரியர் ஆய்வில் ஈடுபட்ட காலத்தில் தேசிய இயக்கம் வளரத் தொடங்கியது. இவரையும் தேசிய உணர்வு ஆட்கொண்டது. பாரதியார், வ.உ.சிதம்பரனார், வ.வே.சு.ஐயர், சுப்பிரமணிய சிவா, மகாத்மா காந்தி ஆகியோரின் கருத்துத்தாக்கம் இவரிடம் காணப்பட்டது. ஆரிய - திராவிட வாதம் வடமொழி - இந்தி எதிர்ப்பு சாதி, சமயப் பிணக்குகள் நிலவிய சூழலில் இவர் வாழ்ந்தார். அந்தச் சூழலின் பாதிப்பும் இவரது எழுத்துக்களில் நிழலிட்டது. இவர் மறைமலை அடிகளின் மாணவர். எனினும், அவர் பிற்காலத்தில் தொடங்கிய தனித்தமிழ் இயக்கம் தமிழ் வளர்ச்சிக்கு உகந்ததன்று எனத் துணிந்து உரைத்தார். பேராசிரியர் சுந்தரம் பிள்ளையின் புலமையைப் பாராட்டியவர்; அவரது மனோன்மணீயத்தைப் பதிப்பித்தவர். இருப்பினும், அவரது ‘திராவிட வாதம்’ அறிவியல் வழியான மொழி நூல் உணர்ச்சிக்குப் புறம்பானது எனக் கூறினார்.

இந்தியாவின் பொது மொழியாக இந்தி வருவது தமிழ் வளர்ச்சிக்குத் தீமை பயக்குமெனில், அதை எதிர்ப்பதில் தவறில்லை என்றும், இது விஷயத்தில் பொறுமையாக இருக்கவேண்டும் என்றும் எழுதினார். வடமொழி அறிவு, வடமொழியில் திரண்டுள்ள அறிவுச் செல்வத்தைப்

பெறும் வேட்கை, வடமொழி தொடர்பான ஆய்வு நூல்களைப் படித்துப் பெற்ற புலமை, இந்தியச் சூழலில் வடமொழி பெற்றிருந்த செல்வாக்கு, இந்திய மொழி - இலக்கியாப் பண்பாடுகளில் அதன் தாக்கம் முதலியவை இவரை வடமொழிபால் ஈர்த்ததில் வியப்பில்லை. இந்தக் கண்ணோட்டத்தில் தமிழுக்கும் - வடமொழிக்கும் உள்ள உறவை ஆராய்ந்தார்; தமிழின் இந்தியத்துவத்தை அறிய முனைந்தார். திராவிட தேசியத்துக்கு எதிராக இந்தியத் தேசியத்தையும், தமிழ் வாதத்துக்கு எதிராக வடமொழி வாதத்தையும் இவர் சார்ந்திருந்தார். (வையாபுரிப்புள்ளை. இராம.சுந்தரம். 1989)

அவரது வீட்டில் இருந்த நூலகத்தில் மட்டும் 2,943 புத்தகங்கள் இருந்தன.

அதுமட்டுமல்லாமல் ஆங்கிலம், தமிழ், பிரெஞ்சு, ஜெர்மன், மலையாளம் போன்ற மொழிகளிலான குறிப்புகளும், ஓலைச்சுவடிகளும் நூற்றுக்கணக்கில். அவை அனைத்தையும் கொல்கத்தாவில் இருந்த தேசிய நூலகத்துக்கு நன்கொடையாக அளித்துவிட்டார் வையாபுரிப் பிள்ளை.

நாற்பதுக்கும் அதிகமான நூல்களையும் நூற்றுக்கணக்கான ஆய்வுகளையும் கட்டுரைகளையும் எழுதிக் குவித்தவர் அவர். மனோன்மணியம் உரையுடன் தொடங்கி 1955 இல் நாலாயிர திவ்யப் பிரபந்தத்தை உரையுடன் பதிப்பித்தது வரை தமிழுக்குப் பெரும் தொண்டு ஆற்றினார்.

சொற்களின் வரலாற்றினையும் அகராதியியல் பற்றின வரலாற்றுத்தகவல்களையும் விரிவாக எழுதிய இவர் தமிழ்க் கலைச் சொல்லாக்கம் பற்றிய கருத்துக்களையும் வெளியிட்டுள்ளார்.

கலைச்சொல்லாக்கக் கோட்பாடு

கலைச்சொல்லாக்கத்தில் ஆங்கிலத்தை ஏற்றுக் கொள்ளும் அதே நேரத்தில் தமிழையும் வளப்படுத்த வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தும் வையாபுரிப்பிள்ளை

'தன்னாற்றல்' பிறமொழிச் சொற்களை எடுத்தாளுதல் என்ற இரண்டு வகையினால் தமிழ்மொழியில் சொற்கள் பெருகின. மேனாட்டு விஞ்ஞான சாஸ்திர பதங்கள் பலவற்றிற்குத் தக்க தமிழ்ச்சொற்கள் காணுதல் அருமை. வேண்டும் இடங்களில் ஆங்கிலச் சொற்களை எடுத்துக் கொள்ளுதல் பொருத்தமேயாகும். இவ்வாறு செய்வது நமக்கு நன்மை தரும் என்றே நான் கருதுகிறேன். ஆனால் வேறு சிலர் இவ்வாறு கருதாது ஆங்கிலமே தலைமை பூண வேண்டுமென்று விவாதிக்கிறார்கள். தமிழின் தலைமைக்கு இவர்கள் இடையூறாக நிற்பவர்கள். (எஸ். வையாபுரிப்பிள்ளை 1989:61)

என தமிழின் தலைமையை முன்னெடுக்கிறார். ஆங்கிலத்தலைமைக்கு இடமளிப்போரை இடையூறு செய்வோர் எனச் சுட்டிக் காட்டவும் தவறவில்லை.

மேலும் அறிவியல் கலைச்சொல்லாக்கத்துக்கு ஆங்கிலச் சொற்களையும் சமஸ்கிருதச் சொற்களையும் ஏற்றுக் கொள்வது தவறாகாது என்பதைத் தமிழ் மறுமலர்ச்சியின் மூலவராகக் கருதப்படும் சுந்தரம் பிள்ளையின் நூற்றொகை விளக்கத்தை எடுத்துக்காட்டி விளக்கியுள்ளார்.

அவ்விளக்கம் வருமாறு:

"நூற்றொகை விளக்கத்திலுள்ள முக்கியமான ஒரு பகுதியைக் குறித்து, இங்கே குறிப்பிட வேண்டியது கட்டாயமாகின்றது. கலைச்சொல்லாக்கம் என்ற தொடர் இப்பொழுது எங்கும் முழங்குகிறது. மாநாடுகள் கூட்டப்படுகின்றன. சாதிச் சச்சரவுகளை விளைவித்துத் தம் ஆத்திரங்களை தீர்க்க இதுவே தக்கநேரம் என்று பலரும் இதில் சேர்ந்துள்ளார்கள்; பலவகை முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் சுந்தரம் பிள்ளை கைக்கொண்ட முறை நமக்கு ஊக்கம் அளிக்கிறது. நூற்றொகை விளக்கத்திலே ஆங்கிலத்திலுள்ள பல விஞ்ஞான சொல்லுக்குரிய மொழிபெயர்ப்புச் சொற்களை இப்பேராசிரியர் தந்திருக்கின்றார். அறிவுப் பெருக்கம் ஒன்றே குறிக்கொள்ளப் பட்டது. இதற்கு இடையூறு விளைப்பனவெல்லாம் தற்கொலையாகும் என்பது நன்கு கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. தமிழ் வளர்ச்சிக்கும் தமிழரது அறிவு வளர்ச்சிக்கும் வேண்டுவன செய்தவர்களில் சுந்தரம் பிள்ளை தலை

சிறந்தவர். இவர் காட்டிய முறை கைக்கொள்ளத் தக்கதென்பது கூறவும் வேண்டுமோ?" (எஸ். வையாபுரிப் பிள்ளை 1952:244)

கலைச்சொல்லாக்கம் சாதிச்சச்சரவுகளைத் தோற்றுவிக்கிறது என வையாபுரிப்பிள்ளை கூறுவது உவேசா கூட்டிய தமிழன்பர் மாநாட்டையும், அதற்கு மாற்றாக இ.மு.சு. கூட்டிய சென்னை மாகாணத் தமிழர் மாநாட்டையும்தான். தமிழன்பர் மாநாடு வடமொழிக் கலைச் சொல்லாக்கத்துக்கு ஆதரவான நிலையையும், சென்னை மாகாணத் தமிழர் மாநாடு அந்நிலைக்கு மாறாக தமிழ்ச்சார்பு நிலை எடுத்ததால், வடமொழி எதிர்ப்பு நிலையையும் மேற்கொண்டிருந்தது. இங்கு மனங்கொள்ளத்தக்கது.

வடமொழி ஆதரவு/எதிர்ப்பு, ஆங்கில எதிர்ப்புக் கோட்பாட்டாளர்களுக்குப் பதிலாக சுந்தரம்பிள்ளையின் ஆங்கில நெறிமுறைகளையே எடுத்துக்காட்டும் வையாபுரிப்பிள்ளை மொழிக்கலப்பு என்பது இயல்பானது என்கிறார். அறிவியல் கலைச்சொல்லாக்கத்தில் கலப்பு என்பது மொழிவளர்ச்சிக்கான முறையே எனக் கருதிய அவர் பிறமொழிக் கலைச்சொற்களையும் கலைச்சொற்களாகப் பயன்படுத்த வேண்டும் என்கிறார்.

"மேல் நாட்டு விஞ்ஞான சாஸ்திரங்கள் பற்றிய அளவில் நமது கல்வித்துறையில் இருப்பவர்கள் அறிவு வளர்ச்சி ஒன்றினையே முக்கிய நோக்கமாகக் கொண்டு ஆங்கிலம் முதலிய அந்நிய மொழிக் கலைச்சொற்களை எடுத்தால் மிகமிக விரிந்த மனப்பான்மையைக் கொண்டவர்களாய் இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் பிறநாட்டு மக்களோடு ஒப்ப விஞ்ஞான சாஸ்திரம் முதலியவற்றில் நாம் மேம்பாடு அடைய முடியும்." (எஸ். வையாபுரிப் பிள்ளை 1989:71)

வையாபுரிப்பிள்ளை தமிழைக் கடலாகவும் வழக்கில் புகும் சொற்களைப் பல ஆறுகளிலிருந்து வரும் நீராகவும் உவமிக்கிறார். இவர் மேலும் எழுத்து, சொல், புதிய வாக்கிய அமைப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய புதிய இலக்கணம் தமிழ் மொழிக்கு எழுத வேண்டும் என்றும் கூறுகிறார். (1947:154:155)



(ஔவை துரைசாமிப் பிள்ளை)

இதே கருத்தை உரைவேந்தர் ஔவை துரைசாமிப் பிள்ளையும் கூறியிருப்பது நினைத்துப் பார்க்கக் கூடியதாக உள்ளது.

“மேனாடுகள், அவர்கள் கூற்றின் படி லத்தீன் மொழியையே மேற்கொண்ட போது நாம் ஏன் அம்மொழிச் சொற்களை மேற்கொண்டு கலைச் சொல் வகையில் உலக மக்களோடு அறிவு ஒற்றுமை எய்தக் கூடாது? வடமொழிச் சொல் மேனாட்டு மக்கள் அறியாததாகலின் எல்லா நாட்டு மக்களுக்கும் தெரியக் கூடிய அச்சொற்களையே நம் மொழியின் எழுத்தோசைக்கு ஏற்ப அமைந்து வழங்குவதால் வரும் கேடு என்ன? தமிழில் உள்ளன போக இல்லாத கலைச் சொற்களைப் பிறநாடுகளில் வாங்கிய வண்ணமே கொண்டு தமிழோசைக்கேற்ப அமைத்துக் கொள்ளுவது தானே அறிவுடைய செயலாகும்.” (ஔவை துரைசாமிப் பிள்ளை: 1938-39, தமிழ்ப் பொழில்: 14, பக் 401-402)

இது முந்தைய காலத்திலிருந்த மொழிக் கொள்கையிலிருந்து வேறுபட்டது. தனித்தமிழ் இயக்கம் தோற்றம் கொண்ட காலகட்டம் இது.

மொழிக்கலப்பு என்பது ஒரு மொழி பேசும் குழுவினர், இன்னொரு மொழி பேசும் குழுவினருடன் தொடர்பு கொள்ளும்போது இயல்பாக நிகழும் பரிமாற்றமாகும். இந்த மொழியியல் அடிப்படையில்தான் வையாபுரிப்பிள்ளையின் கருத்துக்கள் அமைந்துள்ளன.

வையாபுரிப்பிள்ளையின் கலைச்சொல்லாக்கக் கோட்பாட்டை, தமிழில் கலைச்சொற்களை உருவாக்குதல், தமிழில் இல்லாதபோது ஆங்கிலத்தை ஏற்றுக் கொள்ளுதல் எனத் தொகுப்பது பொருந்தும்.

- டாக்டர். சு. நரேந்திரன், எழுத்தாளர், சென்னை டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக சிறப்புநிலைப் பேராசிரியர்.

இந்து தமிழ் திசை

https://www.hindutamil.in/news/blogs/84257-10.html

சா.வையாபுரிப் பிள்ளை



ராஜலட்சுமி சிவலிங்கம்

தமிழ் அறிஞர், ஆராய்ச்சியாளர்

இருபதாம் நூற்றாண்டின் முதன்மைத் தமிழ் ஆராய்ச்சியாளர்களில் ஒருவரும், சிறந்த படைப்பாளியுமான சா.வையாபுரிப் பிள்ளை (Sa.Vaiyapuri Pillai) பிறந்த தினம் இன்று (அக்டோபர் 12). அவரைப் பற்றிய அரிய முத்துக்கள் பத்து:

*நெல்லை மாவட்டம் சிக்கநரசய்யன் பேட்டையில் (1891) பிறந்தார். பாளையங்கோட்டை புனித சவேரியார் பள்ளி, திருநெல்வேலி ம.தி.தா. இந்துக் கல்லூரி, சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் பயின்றார். பட்டப்படிப்பில் தமிழில் அதிக மதிப்பெண் பெற்று, 'சேதுபதி தங்கப்பதக்கம்' வென்றார்.

*திருவனந்தபுரம் சட்டக் கல்லூரியில் சட்டம் பயின்றார். திருவனந்தபுரம், திருநெல்வேலியில் வழக்கறிஞராகப் பணியாற்றினார். தமிழில் நல்ல புலமை பெற்றிருந்ததால், வழக்கறிஞர் பணிக்கு இடையே பல்வேறு ஆய்வுக் கட்டுரைகள் எழுதினார்.

*பழந்தமிழ் இலக்கியங்களைத் தொகுத்து, ஆய்வு செய்து வெளியிட்டார். ஓலைச் சுவடிகளைப் புதுப்பித்ததுடன், கால நிர்ணய ஆய்வுகள் மூலம், அவை இயற்றப்பட்ட காலகட்டங்களைக் கண்டறிந்தார். மனோன்மணியம், நாலாயிர திவ்யப் பிரபந்தம் உள்ளிட்டவற்றை உரையுடன் பதிப்பித்தார். உ.வே.சாமிநாத ஐயருக்குப் பிறகு பழந்தமிழ் இலக்கியங்களைத் தொகுத்து, ஆய்வு செய்து வெளியிட்டவர் என்ற பெருமை பெற்றார்.

*சென்னை பல்கலைக்கழகம் 1926-ல் உருவாக்கிவந்த தமிழ் அகராதியின் பதிப்பாசிரியராகப் பணியாற்றினார். திருவிதாங்கூர் பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றினார். அது பொற்காலம் என போற்றப்பட்டது. அப்போது மலையாள மொழி லெக்ஸிகன் சொற்களஞ்சியம் பதிப்பிக்கப்பட்டது. இந்த அகராதி உருவாக்கும் குழுவின் உறுப்பினராகவும் செயல்பட்டார்.

*அகராதிக்கான சொற்தரவுகளைச் சேகரித்தபோது, அவற்றின் ஆதார நூல்கள் நல்ல முறையில் பதிப்பிக்கப்பட வேண்டும் என்பதை உணர்ந்தார். அதன்பிறகு படைப்பு, திறனாய்வு, பதிப்பு பணிகளுக்காகவே தன்னை அர்ப்பணித்தார். சென்னை பல்கலைக்கழக தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவராக 1936-ல் பொறுப்பேற்றார். பல ஆராய்ச்சியாளர்களை உருவாக்கினார்.

*சிறந்த பதிப்புக்கான விதிமுறைகளை வகுத்தார். சொற்களைப் பிரிக்க சில ஒழுங்கு முறைகளைக் கட்டமைத்தார். எதிர்காலத்தில் தமிழ் ஆராய்ச்சி

எப்படி இருக்க வேண்டும் என்பது குறித்த தனது கற்பனையையும் எழுதி வைத்துள்ளார்.

*ரசிகமணி டி.கே.சி.யுடன் இணைந்து திருநெல்வேலியில் கம்பன் கழகம் அமைப்பைத் தொடங்கினார். வ.உ.சிதம்பரனார், பாரதியாரோடு நெருங்கிய பழக்கம் கொண்டிருந்தார். தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் புலமை பெற்ற இவர், சுமார் 250 கட்டுரைகளை எழுதியுள்ளார்.

*களவியற்காரிகை, கம்பராமாயணம், தொல்காப்பியம், திருமந்திரம், திருமுருகாற்றுப்படை உட்பட சுமார் 40 நூல்களைப் பதிப்பித்தார். ஆயிரக்கணக்கான நூல்கள் கொண்ட நூலகத்தைச் சொந்தமாகவே வைத்திருந்தார். தமிழ், சமஸ்கிருதம், மலையாளம், ஆங்கிலம், பிரெஞ்ச், ஜெர்மன் மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருந்தார்.

*அனைத்து மொழிகளையும் நேசித்தவர். ஆங்கிலம், தமிழ் தவிர, மலையாளம், பிரெஞ்ச், ஜெர்மன் மொழிகளில் பல குறிப்புகளும் ஓலைச் சுவடிகளையும் நூற்றுக்கணக்கில் சேகரித்து வைத்திருந்தார். இவை அனைத்தையும் கல்கத்தா தேசிய நூலகத்துக்கு நன்கொடையாக அளித்துவிட்டார்.

*தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு 40 ஆண்டுகாலம் தொண்டாற்றிய வரும், ஆய்வுக் கட்டுரையாளர், திறனாய்வாளர், காலமொழி ஆராய்ச்சியாளர், மொழிபெயர்ப்பாளர், சொற்பொழிவாளர், எழுத்தாளர், கவிஞர் எனப் பன்முகப் பரிமாணம் கொண்டவருமான சா.வையாபுரிப் பிள்ளை 65-வது வயதில் (1956) மறைந்தார்.

இலக்கிய தீபம்

எஸ் வையாபுரிப்பிள்ளை

chrome-extension://efaidnbmnnnibpcajpcglclefindmkaj/https://www.projectmadurai.org/pm_etexts/pdf/pm0326.pdf

ஆய்வுப் பங்களிப்பு

எஸ்.வையாபுரிப்பிள்ளை தமிழ் இலக்கியங்களை காலவரிசைப்படுத்துவது, இலக்கியங்களின் உள்ளடக்கத்தின் அடிப்படையில் வகைப்படுத்துவது ஆகியவற்றில் பெரும்பங்களிப்பாற்றியவர். இலக்கியங்களை ஒட்டுமொத்த இந்திய-தமிழ் வரலாற்றின் பின்னணியில், தொல்லியல் சான்றுகளுடன் இணைத்து ஆராயவேண்டும் என்னும் கருத்து கொண்டவர். இலக்கிய ஆய்வுகளை மொழிப்பெருமித நோக்குடன் அகவயமாக அணுகுவதை அவர் ஏற்கவில்லை. தமிழாய்வாளர்களுக்கு சமஸ்கிருதம், ஆங்கிலம், பாலி, பிராகிருதம் போன்ற பிற மொழி அறிதல்கள் இன்றியமையாதவை என்றும், ஆய்வு முடிவுகள் இந்தியாவின் பிறமொழிச்சூழல்களிலுள்ள ஆய்வுகளுடன் கொள்ளும் ஒத்திசைவும் முக்கியமானது என்றும் கருதினார்.

பேரா. ராதா செல்லப்பன் எஸ்.வையாபுரிப் பிள்ளையின் முதன்மை ஆய்வுக்கொடைகள் என இவற்றைச் சொல்கிறார்

- 1940-ல் சமாஜப் பதிப்பகச் சங்க இலக்கியத்தைப் பதிப்பித்தார். அதுவரை எட்டுத் தொகையும் பத்துப்பாட்டும் என்றறியப்பட்ட நிலையிலிருந்து சங்க இலக்கியம் என்ற பெயரை நிலைநிறுத்தியவர் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையே.
- சங்கப் பாடல்கள் பாடப்பெற்ற காலமும் அவை தொகுக்கப்பெற்ற காலமும் ஒன்றல்ல என்று முதலில் தெரிவித்தவர் இவரே. இக்கருத்து இன்று ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள கருத்து. (தொ.பொ.மீ - - A History of Tamil Literature pp.34)
- சங்க இலக்கியங்களுள் கலித்தொகை, பரிபாடல், திருமுருகாற்றுப்படை ஆகியவை காலத்தால் பிற்பட்டவை என்ற இவரது கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.
- முச்சங்கங்கள் பற்றிய வரலாறு ஏற்றுக்கொள்ளத்தக்கதன்று என்ற பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை கருத்தை அறிஞர்கள் ஒத்துக்கொண்டுள்ளனர் (மு.வரதராசன். தமிழ் இலக்கிய வரலாறு பக்.29)

- தொல்காப்பியர் சமணர் என்ற இவர் கருத்து பொதுவாக ஏற்கப்பட்டது.

இலக்கிய இடம்

தமிழிலக்கியத்தில் வையாபுரிப் பிள்ளையின் இடம் நான்கு அடிப்படைகளால் ஆனது.

- தமிழிலக்கியங்களின் காலம், அவற்றின் பாடபேதம் ஆகியவற்றை ஆராய்வதில் வரலாறு சார்ந்த புறவயமான முறைமையை வலியுறுத்தினார். மொழிப்பற்று, இனப்பெருமிதம் ஆகிய அகவயமான காரணிகளால் பாதிக்கப்படாத ஆய்வு முறைக்காக வாதாடினார். இலக்கிய ஆய்வுகளில் தொல்லியல் சான்றுகளே முதன்மைச்சான்றுகள் என்றும் மொழிச்சான்றுகள் துணைச்சான்றுகளாகவே திகழமுடியும் என்றும் கூறினார். இலக்கியவரலாறு என்பது பொதுவரலாறு, சமூகவரலாறு ஆகியவற்றின் ஒரு பகுதியென ஒத்திசைவு கொண்டிருக்கவேண்டும் என்றார். வையாபுரிப்பிள்ளை தனிப்பெருமை நாடும் ஆய்வுமுறைமைகளுக்கு எதிரானவர். உலக பண்பாடு, இந்தியப்பண்பாடு ஆகிய பெரும்பகைப்புலத்திலேயே அவருடைய தமிழாய்வுகள் அமைந்தன. அவருடைய ஆய்வுமுறையே தமிழின் ஆய்வுமுறைகளில் முற்றிலும் புறவயமான முறைமை சார்ந்தது.
- வையாபுரிப்பிள்ளை தன் ஆய்வுமுறையை கடைப்பிடிக்கும் அறிஞர்குழு ஒன்றை உருவாக்கினார். கே.என்.சிவராஜபிள்ளை, மு. அருணாசலம் , போன்றவர்கள் உதாரணம். அந்த ஆய்வுமுறையை கடைப்பிடித்த மூன்று தலைமுறை மாணவர்கள் அவரிடமிருந்து உருவானார்கள். அவருடைய நேரடி மாணவர்கள் வ.அய்.சுப்ரமணியம், மு.சண்முகம் பிள்ளை போன்றவர்கள். அவருடைய மாணவரின் மாணவர்கள் கி.நாச்சிமுத்து, அ.கா. பெருமாள் எம். வேதசகாயகுமார் போன்றவர்கள். அவர்களின்

மாணவர்கள் என சொல்லத்தக்க இளைய தலைமுறையினரும் இன்று ஆய்வுக்களத்தில் உள்ளனர்

- தமிழ்ப்பேரகராதி வையாபுரிப் பிள்ளையின் பெரும் பங்களிப்பு. செவ்வியல் சொற்கள், வட்டாரவழக்குச் சொற்கள், பொதுப்புழக்கச் சொற்கள் என அனைத்துச் சொற்களையும் தொகுத்து உருவாக்கப்பட்ட பேரரகராதி தமிழ் மொழிவளர்ச்சியின் அடித்தளங்களில் ஒன்று. ஒவ்வொரு சொல்லுக்கும் பொருள்வேறுபாடுகள், உச்சரிப்பு வேறுபாடுகள், முதல்முதலாக அச்சொல் பயின்றுவரும் இடம் ஆகியவை அளிக்கப்பட்ட அகராதி இது. மலையாளப்பேரகராதியிலும் வையாபுரிப் பிள்ளையின் பங்களிப்பு முக்கியமானது.
- பதிப்பாசிரியராக வையாபுரிப்பிள்ளை மூலங்களை ஒப்பிடுதல், பாடபேதம் குறித்தல் ஆகியவற்றில் தெளிவான நெறிகளையும் முறைமைகளையும் முன்வைத்தவர், அவற்றை பயிற்றுவித்தவர். சே. கல்பனா வையாபுரிப்பிள்ளையின் ஆய்வுமுறை பற்றி எழுதியுள்ளார். (சேக்கிழார் கல்பனா-எஸ்.வையாபுரிப்பிள்ளையின் ஆய்வுமுறைமை)

விவாதங்கள்

- வையாபுரிப்பிள்ளையின் இலக்கியக் கால ஆராய்ச்சியை தேவநேயப் பாவாணர் போன்ற தமிழியக்கப் பார்வை கொண்டவர்கள் ஏற்கவில்லை. அவர்கள் தமிழிலக்கியத்தின் காலத்தை வையாபுரிப் பிள்ளை கூறிய காலத்திற்கும் ஆயிரம் ஆண்டுகளுக்கும் முன்னால், பொமு 1000 க்கும் அப்பால் கொண்டுசென்றனர். அதற்கு அகவயமான சொல்லாராய்ச்சிகளையே சான்றாகக் காட்டினர். வையாபுரிப்பிள்ளை அவர்களால் கடுமையாக தாக்கப்பட்டார்.
- வையாபுரிப்பிள்ளையின் பேரகராதியில் ஒரு சொல் முதன்முதலில் தமிழிலக்கியத்தில் எங்கு வருகிறது என்னும் அடிப்படையிலேயே வேர்ச்சொல் குறிப்பிடப்பட்டது.

தேவநேயப்பாவாணர் போன்றவர்கள் எல்லா பழந்தமிழ்சொற்களும் தமிழ்ச்சொற்களே என்று சொற்புணர்ச்சி முறைகளின் படி வாதிட்டனர். இந்திய மொழிகள் அனைத்துக்கும் தமிழே முதல்மொழி என்பது அவர்களின் தரப்பாக இருந்தது.

- வையாபுரிப் பிள்ளையின் அகராதியில் இலக்கிய நூல்களில் சொற்கள் எவ்வண்ணம் உள்ளனவோ அவ்வண்ணம் அளிக்கப்பட்டன. ஆனால் தங்கள் சாதியை தாங்கள் எப்படி குறிப்பிடுகிறோமோ அவ்வாறே சொற்கள் இடம்பெறவேண்டும் என்று பெரும் எதிர்ப்பு அவர் காலகட்டத்தில் உருவானது. அக்காலச் சாதிவெறி அவருக்கு எதிராக கசப்புகளாக திரண்டது.

நூல்கள் பட்டியல்

நாவல்

- 1958 - ராஜி

சிறுகதைகள்

- 1944 - சிறுகதை மஞ்சரி, தினமணி வெளியீடு

ஆராய்ச்சிநூல்கள்

- 1930 - ஆராய்ச்சியுரைத் தொகுதி-1, ஆசிரியர் வெளியீடு
- 1947 - இலக்கியச் சிந்தனைகள், பாரி நிலையம்
- 1949 - தமிழர் பண்பாடு, தமிழ்ப் புத்தகாலயம்
- 1950 - கம்பன் ஆராய்ச்சிப் பதிப்பு, கம்பன் கழகம், காரைக்குடி
- 1951 - உரைமணிமாலை, ஆசிரியர் பதிப்பு
- 1952 - இலக்கிய தீபம், பாரி நிலையம்
- 1952 - இலக்கிய உதயம் (பகுதி 2), தமிழ்ப் புத்தகாலயம்

- 1954 - இலக்கிய மணிமாலை, தமிழ்ப் புத்தகாலயம்
- 1955 - கம்பன் காவியம், தமிழ்ப் புத்தகாலயம்
- 1956 - இலக்கணச் சிந்தனைகள், பாரி நிலையம்
- 1956 - திராவிட மொழிகளில் ஆராய்ச்சி, தமிழ்ப் புத்தகாலயம், இரண்டாம் பதிப்பு
- 1956 - History of Tamil Language & Literature, NCBH
- 1956 - சொற்கலை விருந்து, பாரி நிலையம்
- 1957 - காவியகாலம், தமிழ்ப் புத்தகாலயம்
- 1958 - இலக்கிய விளக்கம், தமிழ்ப் புத்தகாலயம்
- 1959 - தமிழ்ச் சுடர்மணிகள், பாரி நிலையம், மூன்றாம் பதிப்பு
- 1959 - அகராதி நினைவுகள், தமிழ்ப் புத்தகாலயம்
- 1960 - தமிழின் மறுமலர்ச்சி , மூன்றாம் பதிப்பு பாரி நிலையம்

பாடநூல் தொகுப்பு

- இலக்கிய மஞ்சரி முதல் புத்தகம்-பொதுப் பகுதி (நான்காம் பாரத்திற்குரியது) பாடநூல் தொகுப்பு, 1953, ஆக்ஸ்பர்ட் யூனிவர்ஸிடி ப்ரெஸ்
- இலக்கிய மஞ்சரி இரண்டாம் புத்தகம்-சிறப்புப் பகுதி (நான்காம் பாரத்திற்குரியது) பாடநூல் தொகுப்பு, 1953, ஆக்ஸ்பர்ட் யூனிவர்ஸிடி ப்ரெஸ்
- இலக்கிய மஞ்சரி இரண்டாம் புத்தகம்-பொதுப் பகுதி (ஐந்தாம் பாரத்திற்குரியது) பாடநூல் தொகுப்பு, 1953, ஆக்ஸ்பர்ட் யூனிவர்ஸிடி ப்ரெஸ்
- இலக்கிய மஞ்சரி இரண்டாம் புத்தகம்-சிறப்புப் பகுதி (ஐந்தாம் பாரத்திற்குரியது) பாடநூல் தொகுப்பு, 1953, ஆக்ஸ்பர்ட் யூனிவர்ஸிடி ப்ரெஸ்

மொழிபெயர்ப்புகள்

- லகு சித்தாந்த கௌமுதி (தமிழில்)
- Shelley (houe's philosophy) (தமிழில்)
- william Henry Davies (leisure) (தமிழில்)

- walt whitman கவிதைகள் (தமிழில்)

ஆங்கில நூல்கள்

- History of Tamil Literature
- 1946 - Research in Dravidian Language, Madras Premier Co., Madras

பதிப்பித்த நூல்கள்

அகராதியும் நிகண்டுகளும்

- தமிழ்ப் பேரகராதி, 1936, சென்னைப் பல்கலைக்கழகம்
- அரும்பொருள் விளக்க நிகண்டு தமிழகராதியின் ஆதாரநூற்றொகுதி-2 அருமருந்தைய தேசிகர் 1931. மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலை, செந்தமிழ்ப் பிரசுரம்-54, மதுரை
- கயாதரம் 1939, சென்னைப் பல்கலைக்கழக சென்னை ஸர்வகலாசாலை வெளியீடு
- கைலாச நிகண்டு சூடாமணி-சக்தி இதழில் தொடராக வெளிவந்த்து, பிரமாதி ஆண்டு, ஐப்பசி முதல் வைகாசி வரையுள்ள (பங்குளி நீங்கலாக) மாத இதழ்கள், சக்தி காரியாலயம்
- நாமதீப நிகண்டு கல்லிடை நகர் சிவசுப்பிரமணியக் கவிராயர் தமிழகராதியின் ஆதாரநூற்றொகுதி-1 1930, பதிப்பாசிரியர் வெளியீடு
- பொதிகை நிகண்டு, தமிழகராதியின் ஆதாரநூற்றொகுதி-3 கல்லிடைநகர் சாமிநாதக் கவிராயர், 1934. பதிப்பாசிரியர் வெளியீடு

இலக்கியம்

- சங்க இலக்கியம் (எட்டுத் தொகையும் பத்துப் பாட்டும்) -2 தொகுதிகள் 1940 , சைவசித்தாந்த மகா சமாஜம்
- சங்க இலக்கியம் (பாட்டும் தொகையும்) -2 தொகுதிகள் 1967, பாரி நிலையம்

- திருமுருகாற்றுப்படை- புதிய உரை (மூலமும் உரையும்) (சேர்ந்து பதிப்பித்தது), 1933, சைவசித்தாந்த மகா சமாஜம்
- திருமுருகாற்றுப் படை (உரையாசிரியருரையுடன்)- மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலை 1943, செந்தமிழ்ப் பிரசுரம்-68
- புறத்திரட்டு 1938, சென்னை சர்வகலாசாலை
- திருமந்திரம் (சேர்ந்து பதிப்பித்தது) 1933, சைவசித்தாந்த மகா சமாஜம்
- ஸ்ரீ திவ்யப்பிரபந்தம் முதலாயிரம் 1955, மர்ரே.எஸ்.ராஜம்
- பொருள்முருகாற்றுப்படை 1937, சித்தாந்தம் பத்திரிகை, சைவசித்தாந்த மகா சமாஜம்
- அணிமுருகாற்றுப்படை 1937, சித்தாந்தம் பத்திரிகை, சைவசித்தாந்த மகா சமாஜம்
- வருமுருகாற்றுப் படை 1937, சித்தாந்தம் பத்திரிகை, சைவசித்தாந்த மகா சமாஜம்
- அருள்முருகாற்றுப்படை 1937 சித்தாந்தம் பத்திரிகை, சைவசித்தாந்த மகா சமாஜம்

இலக்கணம்

- தொல்காப்பியம் (பொருளதிகாரம்-இளம்பூரணம்)-ஒன்பது இயல்களும் (வ.உ.சியுடன் சேர்ந்து பதிப்பித்தது) 1935, வாவிள்ள இராமஸ்வாமிசாஸ்த்ருலு அண்ட் ஸன்ஸ், சென்னை
- தொல்காப்பியம் (பொருளதிகாரம்-இளம்பூரணம்) - மெய்ப்பாட்டியல், உவமயியல், செய்யுளியல், மரபியல் (வ.உ.சியுடன் சேர்ந்து பதிப்பித்தது) 1935, 1936, வாவிள்ள இராமஸ்வாமிசாஸ்த்ருலு அண்ட் ஸன்ஸ், சென்னை
- தொல்காப்பியம் பொருளதிகார முதற்பாகம் (நச்சினார்க்கினியம்) 1934 எஸ்.கனகசபாபதி பிள்ளை வெளியீடு
- நவநீதப்பாட்டியல் (உரையுடன்) நவநீதநடன் 1943, மயிலைத் தமிழ்ச்சங்கம்-1. சென்னை
- களவியற்காரிகை 1931, பதிப்பாசிரியர் வெளியீடு
- பதினெண்கீழ்க்கணக்கு

- இன்னா நாற்பது கபிலர் 1944, சக்தி காரியாலயம், தமிழ்ப் பதிப்பக வெளியீடு-2
- இனியவை நாற்பது பூதஞ்சேந்தனார், 1949, ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம். சென்னை
- திரிகடுகமும் சிறுபஞ்சமூலமும் 1943, சென்னை சர்வகலாசாலை, எண்-15 சென்னை
- நான்மணிக்கடிகை விளம்பி நாகனார் 1944, சக்தி காரியாலயம் தமிழ்ப் பதிப்பக வெளியீடு-1, சென்னை

காப்பியம்

- கம்பராமாயணம் (யுத்த காண்டம்-முதல் மூன்று படலம்)1932
- கம்பராமாயணம் (பாலகாண்டம் முதல் ஏழு படலம்) 1933 ஆழ்வார் திருநகரி திருஞான முத்திரை வெளியீடு
- சீவக சிந்தாமணி 1941, சைவசித்தாந்த மகா சமாஜம்
- நாடகம்
- மனோன்மணீயம், 1922, இரண்டாம் பதிப்பு,பதிப்பாசிரியர் வெளியீடு
- சாத்தூர் நொண்டி நாடகம் சக்தி 1939, சக்தி காரியாலயம்
- ஸ்ரீபராங்குச நாடகம் (;ஆழ்வார் நாடகம்) 1936 ஆழ்வார் திருநகரி திருஞான முத்திரை வெளியீடு
- தூது
- தெய்வச்சிலையார் விறலிவிடு தூது குமாரசுவாமி யவதானி (MPS துரைசாமி முதலியாரோடு சேர்ந்து பதிப்பித்தது 1936 ஆழ்வார் திருநகரி திருஞான முத்திரை வெளியீடு-14
- இராமலிங்கேசர் பணவிடுதூது. அஷ்டாவதானம் சரவணப்பெருமாள் கவிராயர் 1934 நவசக்தி மாலை-4வெளியீடு
- வைத்தியநாத பிள்ளை மீது நெல்விடுதூது; 1933 நவசக்தி வெளியீடு
- வெள்ளைய ராசேந்திரன் துகில்விடு தூது 1927, எஸ. முத்தையாபிள்ளை வெளியீடு

மாலை

- தினகர மாலை என்னும் தினகர வெண்பா -1932 பதிப்பாசிரியர் வெளியீடு
- தென்திருப்பேரை சுவாமி மகரநெடுங்குழைக் காதர் திருப்பணிமாலை, 1933 ஆழ்வார் திருநகரி திருஞான முத்திரை வெளியீடு
- திருக்கோளூர் சுவாமி வைத்தமாநிதி திருப்பணிமாலை, 1933, ஆழ்வார் திருநகரி திருஞான முத்திரை வெளியீடு

உலா

- இராஜராஜதேவருலா, மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலைப் பதிப்பு 1924-25, செந்தமிழ்-23-ம் தொகுதி
- திருக்குறுங்குடி அழகிய நம்பியுலா 1932 , திருக்குறுங்குடி ஜீயர் மடம்
- முப்பந்தொட்டியுலா 1934 சித்தாந்தம் பத்திரிகை, சைவசித்தாந்த மகா சமாஜம்
- கோவை
- மதுரைக் கோவை நிம்பைச் சங்கர நாரணர், 1934, பதிப்பாசிரியர் வெளியீடு
- நாட்டுப்புறக் கதைப்பாடல்
- ராமப்பய்யன் அம்மானை, 1934 நவசக்தி மாலை 1951, சென்னை சர்வகலாசாலை
- இரவிக்குட்டிப் பிள்ளை போர், 1951 சென்னை சர்வகலாசாலை

பிற

- பூகோள விலாசம், மருதூர் ஆபத்தாரணர் 1933 நவசக்தி பதிப்பாசிரியர் வெளியீடு
- சக்தி வகுப்பு 1937, சித்தாந்தம் பத்திரிகை, சைவசித்தாந்த மகா சமாஜம்
- கள வகுப்பு 1937, சித்தாந்தம் பத்திரிகை, சைவசித்தாந்த மகா சமாஜம்
- சொரூப வகுப்பு 1937, சித்தாந்தம் பத்திரிகை, சைவசித்தாந்த மகா சமாஜம்

- கர வகுப்பு, 1937, சித்தாந்தம் பத்திரிகை, சைவசித்தாந்த மகா சமாஜம்
- திருவெழுகூற்றிருக்கை 1937, சைவசித்தாந்த மகா சமாஜம்
- நரிவிருத்தம், 1945

இலக்கிய தீபம்

எஸ். வையாபுரிப்பிள்ளை

https://www.projectmadurai.org/pm_etexts/utf8/pmuni0326.html

வெளியிடுவோர்:
பாரிநிலையம்,
59. பிராட்வே-சென்னை 1.
முதற்பதிப்பு நவம்பர்: 1952
விலை ரூ.3-0-0
சங்கர் பிரிண்டர்ஸ் 114, பிராட்வே சென்னை-1

வெளியிடுவோர் குறிப்பு

பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளை அவர்களின் ஆராய்ச்சியுரைத்தொகுதி ஒன்றை வெளியிடுவதில் நாங்கள் மிக்க மகிழ்ச்சி அடைகிறோம்.

பேராசிரியர் அவர்களைத் தமிழுலகில் அறியாதார் யார்? அவர்கள் பதிப்பாசிரியராக விளங்கிப் பதிப்பித்து வெளியிட்ட தமிழ்ப்பேரகராதி (தமிழ் லெக்ஸிகன்) நம் தமிழிற்கு ஒரு செல்வமன்றோ? அகராதி மட்டுமா? அகராதி நிலையில் பண்டை நாளில் உதவிய எத்தனையோ நிகண்டுகளை அவர்கள் பரிசோதித்து வெளியிட்டுள்ளார்கள். அச்சில் வாராத பல தமிழ்-இலக்கிய இலக்கண நூல்களைப் பிழையற அச்சு வாகனமேற்றியும், தமிழன்னைக்குப் பெரும்பணி புரிந்துள்ளார்கள்.அவர்களுடைய பதிப்புக்கள் ஒவ்வொன்றும் தனிப்பட்ட சிறந்த அம்சங்கள் பலவற்றைக் கொண்டுள்ளது. அந் நூல்களுக்கு அவர்கள் எழுதியுள்ள முன்னுரைகள் ஆராய்ச்சி நலம் சிறந்து விளங்குகின்றன.

இலக்கிய ஆராய்ச்சி, இலக்கண ஆராய்ச்சி, சரித ஆராய்ச்சி, மொழி ஆராய்ச்சி, சமய ஆராய்ச்சி, கவிதை ஆராய்ச்சி என்றிப் படியாகப் பல துறைகளிலும் ஆராய்ந்து,வையாபுரிப் பிள்ளையவர்கள் சிறந்த பொருள்களை வெளிப்படுத்தி வருகிறார்கள். அவற்றுள் இலக்கிய ஆராய்ச்சி பற்றிய பதினாறு கட்டுரைகள் இத்தொகுதியில் இடம் பெற்றுள்ளன.

இக்கட்டுரைகளெல்லாம் தமிழ் மணமும்,ஆராய்ச்சி நலமும் செறிந்து கற்பார்க்குப் பெருவிருந்தாய் அமைந்துள்ளன. ஒவ்வொன்றிலும் இதுவரைப் பிறரால் அறியப்படாத புதிய முடிபுகள் பல ஆராய்ந்து நிறுவப்பட்டுள்ளன. தமது கொள்கைகளை நிறுவும் பொருட்டு ஆசிரியர் தரும் காரணங்கள் ஒன்றன்மேல் ஒன்றாய் முறைப்பட அமைந்து கற்பார் மனத்தைக் கவர்கின்றன.

ஆராய்ச்சிக்குரிய ஒவ்வொரு விஷயத்திலும் கருத்து வேறுபாட்டிற்கு இடமிருத்தல் இயல்பே. பேராசிரியர் அவர்களின் ஆராய்ச்சி முடிபுகள் பற்றியும் அபிப்பிராய பேதம் கொள்வோர் உண்டு. ஆனால், அங்ஙனம் மாறுபட்டுரைப்போர் யாரும் இதுவரை தக்க காரணஙகளோ ஆதாரங்களோ காட்டி மறுக்கவில்லை. எந்த விஷயத்தையும் விருப்பு வெறுப்பற்று நடுநிலையில் நின்று ஆராய்ந்து, உண்மையெனத் தாம் நன்கு தெளிந்த பின்பே அதனை வெளியிட முன்வருவது பேராசிரியரவர்களின் இயல்பு. இதன் உண்மையை, மெய்ப்பொருள் காண வேண்டுமென்ற நோக்கோடு இந்நூலைக் கற்பவர் யாரும் நன்கு உணர்வர் என்பது திண்ணம்.

ஆராய்ச்சிகளை மிகத் தெளிந்த நடையில், கருத்துக்களெல்லாமே செவ்விதின் விளங்க எழுதியுள்ளமை மிகவும் போற்றத் தக்கதாம்; கருத்தின் தெளிவு உரைநடையில் நன்கு பிரதி பலிக்கிறது. பேராசிரியர் அவர்களின் தமிழ்-உரை நடையில் தெளிவும் இனிமையும் எங்கும் ததும்புகின்றன.

'இலக்கிய தீபம்' இதுவரையில் வெளிவாராத புத்தகம். இதனை முதன் முதல் வெளியிடும் பேற்றை எங்களுக்கு அளித்த பேராசிரியர் அவர்களுக்கு எமது நிலையத்தின் நன்றியும், வணக்கமும் உரியவாகுக. இதுபோன்றே பேராசிரியர் அவர்கள் எழுதியுள்ள இலக்கிய ஆராய்ச்சி, மொழி-ஆராய்ச்சி, சரித ஆராய்ச்சி முதலிய பிற நூல்களையும் அடுத்து

ஒவ்வொன்றாக வெளியிட எண்ணியுள்ளோம். தமிழன்பர்களின் ஆதரவு எங்களுக்கு உற்றதுணையாய் உதவும் என்று நம்புகிறோம்.

'இலக்கிய தீபம்' தமிழன்னையின் திருக்கோயிலில் நந்தா விளக்காய் நின்று என்றும் ஒளிர்வதாக.

பாரி நிலையத்தார்

முன்னுரை

இலக்கிய தீபம் என்னும் இந்நூலில் அடங்கியுள்ள கட்டுரைகள் வெவ்வேறு காலத்தில் வெவ்வேறு பத்திரிகைகளில் வெளிவந்தவை. இவற்றை ஒருசேரத்தொகுத்து இப்போது வெளியிட்டுள்ளேன்.

இலக்கியங்களின் இயல்பையும் வகையையும் குறித்துப் பொதுப்பட முதலாவது நாம் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். இதனைக் கருதியே 'இருவகை இலக்கியம்' என்ற கட்டுரை இந்நூலின் தொடக்கமாக வைக்கப்பட்டுள்ளது.

நமது பண்டை இலக்கியங்களைப் பாட்டும் தொகையும் என்றல் மரபு. பாட்டு என்பது பத்துப்பாட்டுள் அடங்கியவை. இவை இன்ன என்பதை

முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி-மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து.

என்ற பழைய வெண்பா உணர்த்துகிறது. இங்ஙனமே, தொகை யென்பது எட்டுத்தொகையெனப் பெயர் சிறந்த தொகுப்பு நூல்களை யாம். இத்தொகை நூல்கள் இன்னவென்பதை

நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியேஅகம் புறமென்று
இத்திறத்த எட்டுத் தொகை

என்ற பழைய வெண்பா உணர்த்துகிறது.

பத்துப்பாட்டில் அடங்கிய பாட்டுக்களின் காலமுறையை ஆராய்வது இரண்டாவது கட்டுரை. இத்தொகுதியில், முதலாவதாக அமைந்துள்ள திருமுருகாற்றுப்படை நக்கீரர் இயற்றியது என்பர். இப் பெரும்புலவரே பத்துப்பாட்டில் எட்டாவதாக உள்ள நெடுநல்வாடையையும் இயற்றினர் என்பர். இவ் விருநூல்களின் ஆசிரியர்களும் வேறு வேறாக இருக்கவேண்டுமென்பது எனது துணிபு. இவர்களைப்பற்றியும் இவ் விருநூல்களைப் பற்றியும் அமைந்தவை அடுத்த இரண்டு கட்டுரைகள்.

பத்துப்பாட்டின் ஈற்றயலில் வைக்கப்பட்டுள்ள பட்டினப்பாலையை அரங்கேற்றியது பற்றி ஒரு சரித்திரச் செய்தி சாசன வாயிலாகத் தெரியவருகின்றது. இதனை விளக்குவதே ஐந்தாவது கட்டுரை.

இனி, தொகை நூல்களைத் தொகுத்த காலமுறையைப்பற்றித் தெரிந்துகொள்வது அவசியம். இதனை ஆராய்ந்து துணிவது அடுத்து வைக்கப்பட்டுள்ள கட்டுரை. தொகை நூல்களுள் இரண்டு நூல்கள் மிகப் பற்பட்டவை என்று கருதுவற்குச் சான்றுகள் உள்ளன. இவை கலித்தொகையும் பரிபாடலுமாம். ஏனையவற்றில் அகத்திணை பற்றியன நான்கு; புறத்திணை பற்றியன இரண்டு. அகத்திணைபற்றிய நூல்களுள் குறுந்தொகை மிகச் சிறந்தது. இக்குறுந்தொகையைப் பொருளாகக் கொண்டு எழுந்ததே ஏழாவது கட்டுரையாகும். இக்குறுந்தொகையில் காணும் ஒரு சரித்திரக் குறிப்பைப் பற்றியது அடுத்து வைக்கப்பட்டுள்ள கட்டுரை. இந்நூலில் வரும் ஒரு செய்யுளின் பொருள்பற்றியது ஒன்பதாவது கட்டுரை.

புறத்திணை பற்றிய நூல் இரண்டனுள், பதிற்றுப்பத்து முழுவதும் சேரர்களுக்கு உரியது. இந்நூலின் கடவுள் வாழ்த்துச் செய்யுள் இதுவரை அகப்படாத தொன்றாம். இதனைத் தொல்காப்பியப் பொருளதிகார உரையிலிருந்து தெரிந்து புலப்படுத்துவது பத்தாவது கட்டுரை. பிறிதொரு புறத்திணை நூலாகிய புறநானூற்றில் சரித்திரச்செய்திகள் பல உள்ளன, சரித்திர ஆராய்ச்சியாளருக்கு இரு கிடைத்தற்கரிய கருவூலம். இந்நூலின் கண்ணிருந்து இரண்டு சரித்திரச் செய்திகளையெடுத்து 11, 12-ம் கட்டுரைகள் வியவகரிக்கின்றன.

சங்கநூல்களால் பண்டைக் காலத்திற் சிறப்புற்று விளங்கிய நகரங்களின்

வரலாறுகள் நன்கு புலப்படுகின்றன. இவ்வாறு புலப்படும் இரண்டு நகர வரலாறுகள் 13, 14-ம் கட்டுரைகளில் அமைந்துள்ளன.

சங்கச் செய்யுளென்று இதுவரை பெரும்பாலாரும் கருதிவந்துள்ள நூல்களுள் 'முத்தொள்ளாயிரம்' என்பது ஒன்று. இந்நூல் இலக்கியச் சுவையில் சிறந்து மேம்பட்டு விளங்குவது. இந்நூலைக் குறித்தும் இதன் காலத்தைக் குறித்தும் இறுதிக் கட்டுரைகள் இரண்டும் விளக்குகின்றன.

இக்கட்டுரைகள் வெளிவந்த பத்திரிகைகளின் ஆசிரியர்களுக்கு எனது நன்றி உரித்தாகும்.

கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடும் முயற்சியில் என்னோடு ஒத்துழைத்தும், சென்னையிலிருந்து அச்சுத்தாள்களைத் திருத்தியும் பிறவாறும் துணைபுரிந்தவர் சென்னை ஆர்ட்ஸ் காலேஜ் தமிழாசிரியர் திரு.வித்துவான் M. சண்முகம் பிள்ளையாவர். இங்கே திருவனந்தபுரத்தில் எனக்கு உதவிபுரிந்து வந்தவர் திருவனந்தபுரம் யூனிவர் ஸிட்டி காலேஜ் தமிழாசிரியர் திரு. R. வீரபத்திரன் M.A., L.T., ஆவர். இவ்விருவருக்கும் எனது ஆசி.

இந்நூலை அழகிய முறையில் அச்சியற்றி வெளியிட்ட பாரி நிலையத்தாருக்கு எனது நன்றி.

நான் எழுதிய பிற கட்டுரைகளும் தொகுதி தொகுதியாக விரைவில் வெளிவரும் என்று நம்புகிறேன். இம்முயற்சிகளில் என்னை ஊக்குவித்துவரும் தமிழ்த் தெய்வத்தை மனமொழி மெய்களால் வணங்குகிறேன்.

திருவனந்தபுரம்
ஸர்வகலாசாலை. எஸ். வையாபுரிப் பிள்ளை
25.10.52

உள்ளுறை

வையாபுரிப்பிள்ளை குறித்து

https://www.jeyamohan.in/63/



எஸ்.வையாபுரிப்பிள்ளை

எஸ்.வையாபுரிப்பிள்ளை அவர்களைப்பற்றி பி.கெ சிவக்குமார் அவர்களின் கருத்துக்களைக் கண்டேன். இது குறித்து என் தரப்பினை தெளிவுபடுத்த விழைகிறேன். நான் ஆய்வாளன் அல்ல. ஆகவே பொது வாசகனாகவும் இலக்கியவாதியாகவும் இந்த ஆய்வுச்சூழலின் வெளியே நின்று என் துறைக்குத் தேவையான அளவுக்கு மட்டும் தெரிந்து கொள்பவன். என் கருத்துக்கள் ஒரு பொது நோக்கில் அறியக்கிடைத்தவையே.

1] எஸ்.வையாபுரிப்பிள்ளை முன்வைக்கும் கருத்துக்கள் அனைத்தும் ஏற்புடையனவா ? இன்று அவரது இடம் என்ன ?

அல்ல. எஸ்.வையாபுரிப்பிள்ளை தன் ஆய்வுகளை நிகழ்த்தி ஏறத்தாழ ஐம்பதுவருடங்கள் ஆகின்றன. இத்தனைகாலம் அவரது ஆய்வுமுடிவுகள் அனைத்தும் அபப்டியே நீடித்து நிற்கும் என்று எவருமே வாதிட இயலாது. முதல்நிலைக் கோட்பாடுகளை உருவாக்கிய ஆய்வாளன்கூட அத்தனைகாலம் நீடித்திருக்கமாட்டான். காரணம் ஆய்வு தொடர்ந்து முன்னேறும் ஒரு பயணம்.

எஸ்.வையாபுரிப்பிள்ளை ஆய்வுகளை நிகழ்த்தியபோது தமிழின் முக்கியக் கல்வெட்டுகள் பல படிக்கப்படவில்லை. இன்று தமிழ்ப் பண்பாட்டு ஆய்வில் முதல்தள தாரமாகக் கணிக்கப்படும் பல புதைபொருள் சான்றுகள் விளக்கப்படவில்லை. மானுடவியல், வேர்ச்சொல்லியல் முதலிய பிற அறிவுத்துறைகளுடன் இலக்கிய, தொல்பொருள் சான்றுகள் உரையாடவைக்கப்பட்டு முழுமையான ஆய்வு நிகழ்த்தும் முறையியல் உருவாகி வரவில்லை. அவரது காலகட்டத்தில் அறிமுகமாகியிருந்த முறைமையை கையாண்டு வையாபுரிப்பிள்ளை தன் முடிவுகளுக்கு வருகிறார். வையாபுரிப்பிள்ளையின் பல முடிவுகள் ஆய்வாளர்களால் மறுக்கப்பட்டுள்ளன.

ஆனால் ஆய்வாளராக அவரது முக்கியத்துவம் சில அடிப்படைக் காரணிகளால் அமைந்தது. ஒன்று ஆய்வுக்கு கொள்கைப்பிடிப்போ உணர்ச்சிகரமான ஈடுபாடுகளோ தடையே ஆகும் என்றும் ஆய்வுக்கு அடிப்படையாக அமைவது புறவயமான முறைமையே என்றும் அவர் நம்பியமை. இரண்டு ஆய்வுக்குப் பின்புலமாக தமிழ்நாட்டில் அன்று

இருந்த சமூக அதிகாரத்துக்கான போட்டியில் அவர் பக்கம் சாராமல் நின்றது.

இன்று அச்சூழலை புரிந்துகொள்ளும் உதாரணமாக இரு நூல்களை வாசகர்கள் பரிசீலித்து நோக்கவேண்டுமென்று எண்ணுகிறேன். சு .கி ஜெயகரன் அவர்கள் எழுதிய சமீப கால நூலான ` ` குமரி நில நீட்சி ` ` [காலச்சுவடு பதிப்பகம்.] குமரிக்கண்டம் என்ற கருதுகோள் எவ்வாறு தமிழில் உருவாகி பரப்பப்பட்டது என்பதை விவரிக்கிறது. பிரம்மஞானசங்கத்தைச் சேர்ந்த சிலர் `உள்ளுணர்வு ` மூலம் இந்துமகாசமுத்திரத்தில் ஒரு பெருங்கண்டம் இருந்ததாக ` கண்டடைந்து ` அதற்கு லெமூரியா என்று பேரிடுகிறார்கள். சிலப்பதிகாரம் போன்ற நூல்களில் குமரிக் கோடு பஃறுளி று முதலியவற்றை கடல்கொண்டதாக சில வரிகள் வருகின்றன. இங்குள்ள திராவிட இயக்க தமிழறிஞர்கள் இரண்டையும் எளிதாக இணைத்து குமரிக்கண்டம் என்ற பெரிய நிலப்பகுதி தமிழ்நாட்டுக்குத் தெற்கே பரந்து விரிந்துகிடந்ததாகவும், அங்குதான் தமிழ்ப்பண்பாடு பிறந்து ஓங்கியதாகவும் , மானுட இனமே அங்கே தோன்றியிருக்கலாம் என்றும் சொல்ல ஆரம்பித்தார்கள். `மேலைநாட்டு ` அறிஞர்களை மேற்கோள்காட்டி குமரிக்கண்டத்தை அறிவியல்ரீதியாக நிறுவப்பட்ட உண்மையாகவே முன்வைத்தார்கள். அது அதிகாரபூர்வமாக ஏற்கப்பட்டு அரசு சார்பில் உலகத்தமிழ்மாநாட்டில் வெளியிடப்பட்ட செய்திப்படங்களில் கூட காண்பிக்கப்பட்டது. இன்றும் தமிழில் அது நிறுவப்பட்ட உண்மையாகவே காணப்படுகிறது. அதை ஐயப்படுவது தமிழ்துரோகமாக கணிக்கப்படுகிறது. தமிழாய்வுகள் எத்தகைய விருப்பக் கற்பனைகளாக இருந்தன என்பதற்கான ஆதாரம் இது. உண்மையில் இவர்களுடைய அப்பாவித்தனத்துக்கு உலக அளவில் கூட ஒரு சமான உதாரணம் இருக்காது.

சு கி ஜெயகரன் குமரிக்கண்டம் என்ற கருத்து எப்படி அறிவியலடிப்படையே இல்லாத ஆய்வுகள் மூலம் அபத்தமாக உருவாக்கப்பட்டது என்று விரிவாக விவரித்து அடிப்படையான சில வினாக்களை எழுப்புகிறார். இக்கருத்து தமிழில் பேசப்பட்ட இந்த அரைநூற்றாண்டுக் காலத்தில் இந்த எளிமையான அடிப்படைவினாக்கள் எவராலும் எழுப்பபடவில்லை என்பதைத்தான் நாம் கூர்ந்து கவனிக்கவேண்டும். [உதாரணம்

குமரிக்கடலில் அடித்தரை எவ்வளவு ஆழம் உள்ளது என்ற கேள்வி] அத்தகைய ஒரு விவாதத்துக்கான சூழலே இங்கே இருக்கவில்லை. இத்தகைய ஒரு நிலை கொண்ட ஆய்வுச்சூழல் தான் ஆபத்தானது ? எப்படி அது உருவாயிற்று ? இவ்வாறு குமரிக்கண்டத்தை `நிறுவிய ` அதே அறிஞர்கள்தான் எஸ் வையாபுரிப்பிள்ளையை தூக்கிக் கடாசியவர்கள் என்பதை நான் நினைவில்கொள்ள வேண்டும் . வையாபுரிப்பிள்ளையின் ஆய்வு நெறி இத்தகைய அசட்டுத்தனங்களுக்கு முற்றிலும் எதிரானது.

இன்றும் இதேபோக்கு தொடர்வதற்குச் சிறந்த உதாரணம் தஞ்சை தமிழ் பலகலையைச்சேர்ந்த நெடுஞ்செழியன் எழுதிய `தமிழிலக்கியத்தில் உலகாயதம் ` என்ற `ஆய்வு ` நூல். என் நோக்கில் தமிழில் எழுதப்பட்ட மிகச்சிறந்த நகைச்சுவைப்படைப்பு இது. கிரேக்க பொருள்முதல்வாதச் சிந்தனைகள் அனைத்தும் தமிழ்நாட்டிலிருந்து சென்றவை என்று சொல்லாராய்ச்சி மூலம் நிறுவும் நூல் இது. நம் மேடைகளில் இதை தினமும் காணலாம். சமீபத்தில் ஒரு தொலைக்காட்சிப் பேட்டியில் பெரியார் தாசன் சொன்னதாக கேள்விப்பட்டேன். `பெற்றோரொத்தல் ` என்ற சொல்லில் இருந்தே Betrothal என்ற ஆங்கிலச்சொல் வந்திருக்கிறதாம். வையாபுரிப்பிள்ளை போரிட்டு தோற்கடிக்கப்பட்டது இந்த `ஆய்வா `ளர்களுடன்தான். இன்றும் அவருக்கு இங்கே இடமில்லாமல் இருப்பதும் இதனால்தான். இந்த ஆய்வுகளை தமிழுணர்வின் பகுதிகளாகக் காண்பவர்கள்தான் வையாபுரிப்பிள்ளை பேரைக் கேட்டாலே கொதிக்கிறார்கள். கல்விநிலைய ஆய்வுகளில் அவரது ஒரு மேற்கோளைக் காட்டினாலே அவற்றை விழத்தட்டுகிறார்கள்.

இரண்டாவதாக சமூக அதிகாரப்போட்டி. அன்றைய தமிழ்நாட்டில் சாதிகளுக்கு இடையே நடந்த அதிகாரப்போரைப்பற்றி இந்தக் குறிப்பில் கோடி காட்ட விழைகிறேன். வெள்ளையர் எடுத்த இரு மக்கள்தொகை கணக்குகள் இந்திய அளவில் பெரிய சமூகக் கொந்தளிப்புகளை உருவாக்கின. முதல் கணக்கு சாதி அடிப்படையிலும் இரண்டாவது கணக்கு வருண அடிப்படையிலும் எடுக்கப்பட்டது. வருண அடிப்படையில் சாதிக்கணக்கு எடுக்கப்பட்டபோது பல வேளாண் சாதிகள் தங்களை சத்ரியர் என்று அடையாளப்படுத்தின. உதாரணமாக நாடார் மற்றும் தேவர். இது

வைசியர்களாக மட்டுமே கூறத்தக்க வேளாளர் , முதலியார் போன்றவர்களை கொதிப்படையச் செய்தது. சத்ரியர் வைசியர்களைவிட மேலானவர்கள் ஆயிற்றே. மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை முதலியோர் இதற்கு எதிராக எப்படி வேளாளர்களை அமைப்பு ரீதியாக திரட்டிப் போரிடமுற்பட்டனர் என்பதெல்லாம் வரலாறு . ஆரிய வருணப்பிரிவை முற்றாக நிராகரித்து தங்களை மிகத்தொன்மையான ஒரு இனமாகக் அடையாளம்காட்டவேண்டிய கட்டாயம் அவர்களுக்கு ஏற்பட்டது இவ்வாறுதான்.

அன்றைய சூழலில் வேளாளர், முதலியார் முதலிய பிராமணரல்லாத உயர்சாதிகள் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட செய்த முயற்சிகள் ஒருபக்கம். நாடார் போன்ற சாதிகள் தங்கள் இடத்தைக் கோரி நடத்திய போராட்டம் ஒருபக்கம். தலித்துக்கள் முதலியோரை முன்னிலைப்படுத்தும் நோக்குடன் ஆங்கில ஆய்வாளர் செய்த ஆய்வுகள் ஒருபக்கம் என்று மூன்று இழுவிசைகள் அன்று நிலவின. திருநாவுக்கரசரின் காலம் குறித்த கால்டுவெல்லின் ஆய்வுதான் அந்த நூற்றாண்டுகால ஆய்வுப் போராட்டத்தின் தொடக்கப்புள்ளி எனலாம். அது பக்தி இயக்கம் மற்றும் சைவசித்தாந்தத்தின் காலத்தை வெகுவாக பின்னால் கொண்டுவந்தது. பதிமூன்றாம் நூற்றாண்டிற்கு. அவருக்கு வேளாளரின் ஆதிக்கம் பிந்திய காலத்தது என்று காட்டி பறையர் சாதியினரை முதற்குடிகளாக முன்னிறுத்தும் நோக்கம் இருந்தது என்று ஆய்வாளர் வேத சகாய குமார் சொல்கிறார். அந்நூலுக்கு எதிராக மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை செய்த கால ஆராய்ச்சியும் மாணிக்கவாசகர் காலம் குறித்து மறைமலை அடிகள் செய்த ஆராய்ச்சியும் அக்காலத்தை வெகுவாக முற்காலத்துக்குக் கொண்டுசென்றன. அதற்குரிய தரவுகள் சேர்க்கப்பட்டன, தர்க்கங்கள் உருவாக்கபப்ட்டன . இந்த நோக்கின் நீட்சியாகவே அடுத்த கட்டத்தில் தமிழின் தொன்மையை மேலும் பின்னகர்த்தி குமரிக்கண்டத்துக்குக் கொண்டுசெல்லும் திராவிட இயக்க அலை எழுந்தது

இதில் வையாபுரிப்பிள்ளை கால்டுவெல்லையே அதிகம் சார்ந்திருக்கிறார் என்பதே உண்மை. அவர் வேளாளராக தன்னை உணரவில்லை. அவருக்கு இருந்த ஐரோப்பிய ஆய்வுநெறிகள் மீதான நம்பிக்கையே வென்றது. அவரது முக்கியக் குறைபாடு என்னவென்றால் அவர் ஐரோப்பிய ஆய்வு முறைமை மீதான நம்பிக்கையை ஐரோப்பிய ஆய்வாளர் மீதான நம்பிக்கையாக மாற்றிக்

கொண்டார் என்பதுதான். இங்கு கால்டுவெல் பின்னகர்ந்த போது வையாபுரிப்பிள்ளையும் பின்னகர்ந்தார். ஆனால் பொதுவாக தென்தமிழகத்தின் சீரிய ஆய்வாளர்களில் கணிசமானபேருக்கு வையாபுரிப்பிள்ளை முக்கியமான முன்னோடி . கெ கெ பிள்ளை, ப.அருணாச்சலம், பேராசிரியர் ஜேசுதாசன் , அவரது மாணவர்களான அ கா பெருமாள், எம் வேத சகாயகுமார் முதலியோர் உதாரணம்.

ஆய்வுகள் முன்னகரும்தோறும் வையாபுரிப்பிள்ளையை எதிர்த்த `கடற்கோள்வாதிகள் ` மேலும் மேலும் கேலிக்குரியவர்களாக மாறி காலக்கோளுக்கு ஆளாகி மறைவதையே காண்கிறோம். சமீபத்தில் வெளிவந்த ஐராவதம் மகாதேவனின் நூலும் வையாபுரிப்பிள்ளையின் பாதையிலேயே நகர்கிறது. அதனாலேயே அந்த மகத்தான நூல் குறித்தும் பல தமிழறிஞர்கள் ஐயத்துக்கு இடமான மௌனம் சாதிக்கிறார்கள்.[தொன்மையான தமிழ் எழுத்துரு பிராம்மி என்பது எப்படிப்பட்ட ஒரு சர்ச்சையை உருவாக்கியிருக்கவேண்டும்!]

வையாபுரிப்பிள்ளை சம்ஸ்கிருத ஆதரவாளரா ?

எந்த ஒரு ஆய்விலும் ஒட்டியும் வெட்டியும் தரப்புகள் விவாதிக்கவேண்டியுள்ளது . தமிழ் சம்ஸ்கிருத உறவைப் புரிந்துகொள்வதில் மூன்று சாத்தியக்கூறுகளை நாம் உருவகிக்கலாம். தமிழ் தொன்மையும் தனித்தன்மையும் உடையது. சம்ஸ்கிருத உதவி இல்லாமலேயே நிலைநிற்கும் வலிமை கொண்டது. தமிழில் சம்ஸ்கிருதம் கலப்பது ஒரு வரலாற்று மோசடி— இது ஒருவாதம். தமிழ் சம்ஸ்கிருதத்த்தை ஒட்டி வளர்ந்த ஒரு இரண்டாம்கட்ட மொழி என்பது இன்னொரு வாதம். தமிழும் சம்ஸ்கிருதமும் கொண்டும் கொடுத்தும் வளர்ந்தவை என்பது மூன்றாம் தரப்பு.. மூன்று தரப்புகளும் தொடர்ந்து விவாதிக்கும்போதே ஒரு ஆய்வுச்சூழல் உருவாகிறது. இதில் வையாபுரிப்பிள்ளை நடுநிலையான தரப்பை எடுத்தார். இந்திய மொழிகள் அனைத்தும் சம்ஸ்கிருதத்துடன் உரையாடி வளர்ந்தவை என்றும் தமிழுக்கு சம்ஸ்கிருதத்தின் கொடை மிக மிக முக்கியமானது என்றும் அவர் வாதிட்டார் எனலாம். சம்ஸ்கிருதம் சார்ந்த கருத்துக்கள்ளை வையாபுரிப்பிள்ளை வலுவாக முன்வைத்தமைக்குக் காரணம் அவர் ஐரோப்பிய ஆய்வாளர்களை அதிகம் சார்ந்திருந்தமைதான். அப்போது இந்தியவியலில் சம்ஸ்கிருதத்தை மையமாக்கி ஆராய்வதே பொதுவான போக்காக

இருந்தது. இன்றும் அப்போக்கு வலுவாக உள்ளது.அன்று சம்ஸ்கிருத வேர்ச்சொல்லாராய்ச்சி வலுவாக இருந்தமையால் அவரது நோக்கு சம்ஸ்கிருதச் சார்பு கொண்டதாக இருந்தது. ஆனால் தமிழ் வேர்ச்சொல்லாராய்ச்சியின் சாத்தியங்களை அவர் அங்கீகரித்தார். அன்று நிலவிய பொதுவான போக்கு முதல்தரப்புதான். அது வையாபுரிப்பிள்ளைக்கு எதிராக ஒரு பெரிய காழ்ப்பு அலையை உருவாக்கி அவரை ஆரிய அடிவருடி தமிழ்த்துரோகி என்றெல்லாம் முத்திரைகுத்தச் செய்தது.

நிரூபணவாதம் சாராத அறிவுத்துறைகளில் எந்த தரப்பும் இறுதியாக நிறுவப்படுவது இல்லை, எந்தத் தரப்பும் முற்றாக அழிவதுமில்லை. ஆகவே மேலே சொன்ன மூன்று தரப்பும் எப்போதும் இருக்கும். எந்த ஒரு புது கருத்தையும் மூன்று கோணங்களும் தங்கள் நோக்கில் ஆராய்ந்து தங்களுக்குள் விவாதித்து தெளிவுபடுத்துவதே ஆரோக்கியமானதாகும். நானறிந்தவரை கேரளக் கலாச்சார ஆய்வில் தமிழ்மைய நோக்கு சம்ஸ்கிருத மைய நோக்கு என்ற இரு நோக்குகளும் ஆக்கபூர்வமான விவாதத்தையே நிகழ்த்திவருகின்றன. இவற்றின் முரணியக்கமே அங்குள்ள ஆய்வு நகரும் விசை. தமிழில் காழ்ப்பும் வசையும் மூலம் பிற தரப்புகள் அடக்கப்பட்டமையால்தான் ஆய்வுகள் அசட்டுத்தனத்தின் எல்லைக்கே சென்றன. [ஒரு வேடிக்கை நினைவுக்கு வருகிறது . ஆய்வுக்கோவை என்ற வருடாந்தர பிரசுரம் தமிழறிஞர்களால் வெளியிடப்படுகிறது. அதில் ஒரு கட்டுரை கண்ணகி ஒரு கன்னி என்று விரிவாக பேசி நிறுவ முயல்கிறது. அதை இந்து நாளிதழில் திறனாய்வுசெய்த இந்திரா பார்த்த்த சாரதி `இத்தனை ஆதாரம் காண்பித்த ஆசிரியர் ஒரு டாக்டர் சர்டிஃபிகெட்டையும் இணைத்திருக்கலாம் ` என்று எழுதினார்] சம்ஸ்கிருதச் சார்பு உள்ள அறிஞர்கள் பலர் மிக முக்கியமான ஆய்வுகள் செய்துள்ளனர்[உதாரணம் பக்திகாலகட்டம் குறித்த ப அருணாச்சலம் ஆய்வு] அவை இங்கே உதாசீனம் செய்யபப்டுகின்றன.

வையாபுரிப்பிள்ளையின் தரப்பு வலுவாக நிறுவப்படவேண்டும். அது ஒரு சக்தியாக சூழலில் செயல்பட வேண்டும். அதன் மறுதரப்பு ஆரோக்கியமாக இருப்பதற்குக் கூட அது அவசியம்.

வையாபுரிப்பிள்ளை குறித்து என் கருத்து என்ன ?

என் நண்பர்கள் முழுக்க முழுக்க வையாபுரிப்பிள்ளை ஆதரவாளர்கள். ஆனால் எனக்கு சில ஐயங்கள் மற்றும் கருத்துக்கள் உள்ளன. ஆய்வாளன் அல்ல என்பதனால் நான் அது குறித்து எழுதுவது இல்லை.

குமரிக்கண்டம் என்ற கருத்து அறிவியல் அடிப்படை இல்லாத ஒன்றாகவே இன்றுவரை உள்ளது என்றுதான் நான் நினைக்கிறேன். ஆனால் நம் மொழியின் சொற்கள், எராளமான தொன்மங்கள் ஆகியவற்றை குமரிக்கண்டம் கடல்கொண்டது என்ற மையக்கருத்து இன்றி இணைக்கவோ புரிந்துகொள்ளவோ இயலாது என்று எனக்குப் படுகிறது.[உதாரணம் தென்புலத்தோர் என்றால் மூதாதையர்] நான் இப்போது எழுதும் `கொற்றவை ` என்ற நாவலில் புனைவுசார்ந்து அதை செய்ய முயல்கிறேன். ஒரு கருதுகோளாக, விவாதத் தரப்பாக குமரிக்கண்டம் இருந்தபடியேதான் இருக்கவேண்டும். அதை முழுக்க நிராகரித்துவிட இயலாது.

தமிழ் வேர்ச்சொல்லாக்கம் பலவகையான உள்நோக்கங்களும் அசட்டுத்தனங்களும் உடையது என்றாலும் அதில் முக்கியமான சாதனைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன என்று எண்ணுகிறேன். பாவாணரின் வேர்ச்சொல்லாக்கமுறைமையை நான் ஐயப்படுகிறேன்.ஆனால் அவரது மொழிசார்ந்த நுண்ணுணர்வு பல வாசல்களை திறந்துள்ளது. என் மரபை புரிந்துகொள்ள அவர் மிக மிக முக்கியமானவர். வையாபுரிப்பிள்ளை அளவுக்கே முக்கியமானவர். சொல்லப்போனால் ஒரு படைப்பாளியாக எனக்கு அவர் வையாபுரிப்பிள்ளையை விடவும் முக்கியமானவர். நான் கையாளும் சொற்களை அறிய அவரை நான் சார்ந்திருக்கிறேன். அவர் வையாபுரிப்பிள்ளை மீது கொண்ட காழ்ப்பை ஒருவகை புலமைக்காய்ச்சலாகவே நான் எடுத்துக் கொள்கிறேன். அவரது தரப்பு தமிழில் எப்போதும் வலுவாகவே இருக்கும் — இருக்க வேண்டும்.

ஆக நான் விழைவது ஒரு பெரிய விவாதப்புலத்தை. அதில் வையாபுரிப்பிள்ளையும் பாவாணரும் இரு முக்கியமான வல்லமைகள். பாவாணர்மீது இன்று குருட்டுத்தனமான பற்று

கட்டப்படுகிறது. அவரது பாணியில் அசட்டு ஆய்வுகள் குவிந்து சூழல்சீர்கேட்டை உருவாக்குகின்றன. ஆகவே அவரை எதிர்த்து எழுத நேர்கிறது. வையாபுரிப்பிள்ளையின் மகத்தான சாதனைகள் கூட முற்றாகப் புறக்கணிக்கப்படுகின்றன. ஆகவே அவரைப் பற்றி பேசவேண்டியுள்ளது அவ்வளவுதான்.

வையாபுரிப்பிள்ளை பற்றி இன்று செய்யவேண்டியது...

வியாபுரிப்பிள்ளையின் மகன் — அமெரிக்கர் என்றார்கள்— அவரது நூல்களை முழுமையாக பிரசுரிக்க முயன்று சில தொகுதிகலுடன் நின்று விட்டது. தமிழ்ச்சுடர்மணிகள் போன்ற நூல்களை இன்று மீண்டும் கொண்டுவரவேண்டும். யாரிடம் பதிப்புரிமை உள்ளது என்பது சிக்கலாக உள்ளது

வையாபுரிப்பிள்ளை குறித்து நூல் எழுத முற்றிலும் தகுதியானவர் முனைவர் அ கா பெருமாள். அவர் ஏற்கனவே எழுதிய நூலை வையாபுரிப்பிள்ளையின் வரலாற்றுடன் சேர்த்து எழுதும்படி கேட்டுக் கொண்டிருக்கிறேன். அடுத்த வருடம் தமிழினி பிரசுரமாக நூல்வெளிவரக்கூடும்

[2000 திண்ணை இதழில் வெளிவந்த கட்டுரை. Nov 25, 2004 த்தில் இணையதளத்தில். இது மறுபிரசுரம்]

தனக்குத் தேவையான எதையும்
நமது சமூகம் கோரிப் பெறுவதில்லை

பெருமாள் முருகன்

https://keetru.com/index.php?option=com_content&view=article&id=15148&Itemid=139

பெருமாள்முருகன் நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு வட்டம் கூட்டப்பள்ளியில் பிறந்தவர். தமிழ் வட்டார நாவலின் முன்னோடியாகிய எழுத்தாளர் ஆர்.சண்முகசுந்தரம் குறித்து ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றவர். நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றுகின்றார். இவர் பெற்றோர் பெருமாள், பெருமாயி. தன் தந்தையின் பெயரைத் தன் பெயரோடு இணைத்து "பெருமாள் முருகன்" என்னும் பெயரில் கவிதை, சிறுகதை, நாவல், கட்டுரை ஆகியவற்றை எழுதிவருகிறார். காலச்சுவடு இதழின் ஆசிரியர் குழுவில் ஒருவர். மனஓசை, குதிரை வீரன் பயணம் ஆகிய இதழ்களின் ஆசிரியர் குழுவில் பணியாற்றி உள்ளார். ஐந்து நாவல்கள், மூன்று சிறுகதைத் தொகுப்புகள், மூன்று கவிதைத் தொகுப்புகள் இவருடைய புனைவு எழுத்துகள். கொங்கு வட்டாரச் சொல்லகராதியைத் தொகுத்துள்ளார். இவர் எழுதிய மூன்று கட்டுரைத் தொகுப்புகள் வெளிவந்துள்ளன. 'பதிப்புகளும் மறுபதிப்புகளும்' என்ற கட்டுரைத் தொகுப்பு வெளிவர உள்ளது. இரண்டு நூல்களைப் பதிப்பித்துள்ளார். இவரது இரண்டு நாவல்களை வ.கீதா ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

உரையாடியவர் : க.காமராசன்

உங்களுடைய இல்புனைவு எழுத்துகள் (Non fiction) பற்றிப் பேசுவோம். எந்தெந்தப் புலமைத் துறைகளில் கவனம் செலுத்தி வருகின்றீர்கள்?



நான் ஆரம்ப காலங்களில் பல துறைகளிலும் எழுதி வந்தேன். ஆனால், இப்போது புனைவு சாராத எழுத்துத் துறைகளை வரையறைப்படுத்தி வைத்துள்ளேன். பொது வாக அகராதி, குறிப்பாக வட்டார வழக்கு

அகராதி பற்றி எழுதி வருகின்றேன். நாட்டுப்புறவியலில், குறிப்பாகக் கொங்கு வட்டார நாட்டுப்புறவியல் சார்ந்து அண்ணன் மார் சாமி கதைப்பாடல் பற்றிச் சில கட்டுரைகள் எழுதி யுள்ளேன். அப்புறம் பழைய இலக்கியங்களின் பதிப்பு பற்றிக் கவனம் செலுத்துகிறேன். இந்த மூன்று துறைகளே எனது புனைவுசாராத புலமைத் துறைகள். மேலும் அனுபவக் கட்டுரைகள், நவீன புனைவு இலக்கியம் சார்ந்த விமர்சனக் கட்டுரைகள் ஆகியவையும் எழுதுகிறேன்.

நீங்கள் கொங்கு வட்டார வழக்கு அகராதியைத் தொகுத்துள்ளீர்கள். இத்தொகுத்தல் பணியில் உங்களுக்குக் கிட்டிய அனுபவங்கள் யாவை?

கி.ரா.வுடைய அகராதி, அதற்கப்புறம் வெளிவந்திருக்கும் இரண்டு சிறிய அகராதிகளுக்குப் பிறகு என்னுடைய வட்டார வழக்கு அகராதிதான் ஒரு முக்கியமான அகராதி. நான் இந்த அகராதியைத் தொகுக்கும் சமயத்தில் எனக்கு ஒரு முன்மாதிரி எதுவும் இல்லை. கி.ரா.வுடையது அகராதியியல் நெறிமுறைகள்படி அமைந்த அகராதி என்று சொல்ல முடியாது. அவர் ஒரு படைப்பாளியென்ற காரணத்தினால், சொல்லுக்குப் பொருள் கூறும்போது ஒரு கலைக்களஞ்சிய விளக்கம்போல எழுதியிருப்பார். என்னுடைய அகராதியில் சொல்லுக்குப் பொருள் கூறும் போது அகராதியியல் நெறிமுறைகளைப் பின்பற்ற முயன்றுள்ளேன். கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதியை மாதிரியாக வைத்துக்கொண்டு கொங்கு வட்டார வழக்கு அகராதியைத் தொகுத்துள்ளேன்.

தலைச்சொல், அதற்கு இலக்கணக் குறிப்பு, அப்புறம் பொருள், சான்று வாக்கியம் என்ற முறையில் அமைத்துள்ளேன். இதுவரைக்கும் வெளிவந்திருக்கின்ற வட்டார வழக்கு அகராதிகளில் இந்த மாதிரி அகராதியியல் நெறிமுறைகளைப் பின்பற்றி வெளிவந்திருக்கின்ற அகராதி என்னுடையது மட்டுமே. என்னுடைய அகராதிக்குப் பிறகு வெளிவந்திருக்கின்ற வட்டார வழக்கு அகராதிகளில்கூட இந்த அகராதியியல் நெறிமுறைகள் பின்பற்றப்படவில்லை. வட்டார வழக்கு அகராதிகளைத் தொகுக்கின்றவர்கள் படைப்பாளி களாகவும், அகராதியியல் நெறிமுறைகள்பற்றி அறியாதவர் களாகவும்

இருக்கின்றார்கள். அதனால் அவர்கள் யாருமே இலக்கணக்குறிப்பு, சான்று வாக்கியம் கொடுப்பதை யெல்லாம் செய்வதில்லை.

சொற்களைத் தொகுப்பதற்குச் சில முறைகளைப் பின்பற்றினேன். அவற்றில் முக்கியமானது களஆய்வுமுறை தான். களஆய்வுமுறை என்று சொல்லும்போது, அதற்காகத் தனியாக நேரம் ஒதுக்கி எதுவும் திட்டமிடவில்லை. நான் கிராமத்தில் பிறந்து வளர்ந்தவன். கல்லூரியில் படிக்கும் காலத்திலிருந்தே இந்தச் சொற்களைத் தொகுத்துக் கொண்டிருந்தேன். நான் எப்போதும் ஒரு துண்டுச்சீட்டு அல்லது நோட்டு வைத்திருப்பேன். யாராவது புதிதாக ஒரு சொல்லைப் பேசும் போது கேட்டால் உடனே குறித்து வைத்துக்கொள்வேன். அதற்குப் பிறகு வீட்டிற்கு வந்து வீட்டில் சொற்களை எழுதி வைத்திருக்கும் டைரியில் அந்தச் சொல்லையும், அதற்குரிய பொருளையும் எழுதி வைத்துக்கொள்வேன். இப்படித்தான் நிறைய சொற் களைத் தொகுத்தேன். பிறகு ஆர்.சண்முகசுந்தரத்தின் நாவல்கள் போன்றவற்றிலிருந்து கொஞ்சம் சொற்களை எடுத்துக் கொண்டேன். ஆனால் வட்டார நாவல் போன்ற எழுத்துச் சான்றுகளிலிருந்து சொற்களைத் திரட்டும் பணியை நானும் முறையாகச் செய்யவில்லை.

இன்று வட்டார நாவல்கள் வட்டார வழக்குச் சொற்களுக்குப் பெரிய ஆதாரக் கிடங்காக உள்ளது. இந்த நாவல்களிலிருந்து வட்டார வழக்குச் சொற்களை எடுத்துக் கொண்டு, அச்சொற்களுக்கு அவற்றிலிருந்தே சான்று வாக்கியம் கொடுக்கலாம். அப்படிச் செய்யும்போது அந்த அகராதி நம்பகத்தன்மை பெற்றுவிடும். களஆய்விலிருந்து சொல்லை எடுத்து, அதற்கு உதாரணம் கொடுக்கும்போது எனக்குத் தெரிந்த சான்று வாக்கியத்தைக் கொடுக்கிறேன். அப்போது வெளியிலிருக்கின்றவர்கள் நான் கொடுப்பது சரியா, தவறா, அப்படித்தான் வழங்கப்படுகின்றதா என்று மதிப்பிட முடியாது. ஆனால் வட்டார நாவல்களிலிருந்து எடுக்கும்போது அந்தப் பிரச்சினை எழுவதில்லை. இவற்றையெல்லாம் செய்துதான் கொங்கு வட்டார வழக்கு அகராதியின் இரண்டாம் பதிப்பைக் கொண்டுவர உள்ளேன். அதனாலேயே கால தாமதமும் அதிகமாகின்றது.

வட்டாரம் சார்ந்த சொல் என்று ஒரு சொல்லை எப்படி அடையாளப்படுத்த முடியும்? வரையறுக்க முடியும்?

இதில் நிறைய சிரமங்கள் இருக்கின்றன. எல்லா வட்டாரங்களுக்கான அகராதிகள் வெளிவந்த பிறகு சொற்களை ஒப்பிட்டுப் பார்த்த பின்பே ஒரு சொல் இந்த வட்டாரத்திற்கே உரியது என்று உறுதிப்படுத்த முடியும். அதற்கு முன்பு நம்மால் அவ்வளவு உறுதியாக ஒரு சொல் இந்த வட்டாரத்திற்கு மட்டுமே உரியது என்று சொல்லிவிட முடியாது. இப்போது வெளிவந்திருக்கின்ற வட்டார அகராதிகளை எடுத்துப்பார்த்தோம் என்றால் நிறைய பொதுச்சொற்கள், வேறு வட்டாரங்களிலிருக்கின்ற சொற்கள் எல்லாம் கலந்துதான் இருக்கின்றன. இதனைத் தவிர்க்க முடியாது. காரணம் வட்டார வழக்கு அகராதி தொகுக்கும் ஒருவர் எல்லா வட்டாரங்களுக்கும் சென்று தொகுத்து, ஒப்பிட்டுப் பார்த்துச் செய்ய முடியாது. அகராதிப் பணி என்பது ஒரு பெரும் பணி. அதைப் பல பேர் செய்ய வேண்டும்; ஒரு நிறுவனம் செய்ய வேண்டும். இப்படி இருக்கும்போது ஒரு தனிநபர் ஆர்வத்தினால் செய்வது நிறுவனம் செய்யக்கூடிய அளவுக்கு இருக்க முடியாது.

ஒரு சொல் வட்டாரச் சொல் என்பதற்குச் சில வரையறைகளைச் சொல்ல முடியும். ஒரு வட்டாரத்தில் மட்டுமே வழங்கக்கூடிய சொற்கள் சில இருக்கின்றன. நில அமைப்பிற்கேற்ற மாதிரி ஒரு பகுதி மக்களுடைய வாழ்க்கை முறை இருக்கும். அதனால் ஒரு சில சொற்கள் அந்த மக்களிடையே மட்டும் வழக்கிலிருக்கும். அந்த மாதிரியான சொற்களைத் தெளிவாக வட்டார வழக்கு என்று சொல்ல முடியும். உதாரணமாக இந்தப் பகுதியில் ‘இட்டேரி’ என்ற சொல் இருக்கின்றது. இந்தச் சொல் வேறு எந்த வட்டாரத்திலும் இல்லை. அதனை நான்

சரிபார்த்து விட்டேன். வேறு எங்கும் அச்சொல் வழங்கப்படவில்லை. அந்தச் சொல் ஏன் இந்தப் பகுதியில் மட்டும் இருக்கிறது என்றால் ‘இட்டேரி’ என்னும் அமைப்பு இந்தப் பகுதியில் மட்டுமே இருக்கின்றது. அதனால் இந்த மாதிரி இருக்கக்கூடிய சொற்களை எல்லாம் ஒரு குறிப்பிட்ட வட்டாரத்திற்கே உரியவை என்று தெளிவாக வரையறுத்துக் கொள்ள முடியும்.

இன்னும் சில சொற்கள் பொதுச்சொற்களாக இருக்கும். ஆனால் வட்டாரப் பொருள் வேறானதாக இருக்கும். உதாரணமாகத் தொண்டு என்னும் சொல் இருக்கின்றது. இந்தச் சொல் பொதுவழக்கில் சேவை என்னும் பொருளைத் தரக்கூடியது. ஆனால் கொங்கு வட்டாரத்தில் இந்தச் சொல் மோசமான நடத்தையுடைய ஓர் ஆணையோ, ஒரு பெண்ணையோ குறிக்கக்கூடிய வசைச் சொல். இது பொதுச்சொல்தான். ஆனால் வட்டாரப் பொருள் வேறானதாக இருக்கின்றது. இப்படி இருக்கக்கூடிய சொற்களையும் வட்டாரச் சொற்கள் என்று எடுத்துக்கொள்ள வேண்டும்.

இன்னும் சில சொற்கள் பொதுச்சொற்களாக இருக்கும். ஆனால் வட்டாரப் பேச்சு வழக்கில் திரிபடைந்து வேறு உருபெற்று இருக்கும். அந்தச் சொற்களைக் கண்டுபிடிப்பது அவ்வளவு எளிதல்ல. கொஞ்சம் முயன்றால் அந்தச் சொற்களைக் கண்டுபிடிக்க முடியும். கொங்கு வட்டார வழக்கில் 'விருமத்தி' அல்லது 'விருமித்தி' என்ற சொல் இருக்கின்றது. இந்தச் சொல் 'பிரமஹத்தி' என்ற சொல்லின் திரிபென்று கருதுகிறேன். பேயறைந்தவன் மாதிரி ஒரு ஆள் இருக்கிறான் என்றால் அவனை விருமத்தி பிடிச்ச மாதிரி இருக்கிறான் என்று சொல்வார்கள். இந்த மாதிரி சொற்களையும் வட்டாரச் சொற்களாகக் கருத வேண்டும். ஏனென்றால் அந்த மாதிரி சொற்களின் வடிவமே மாறிவிடுகின்றது.

ஏற்கனவே வெளிவந்திருக்கின்ற தமிழ் அகராதிகளில் வட்டார வழக்குச் சொற்களை எப்படிப் பதிவு செய்திருக்கின்றார்கள்? குறிப்பாகச் சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேரகராதி, கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி ஆகியவற்றில் எவ்வாறு பதிவு செய்திருக்கின்றார்கள்?

மிகப் பெரும்பாலான தமிழ் அகராதிகள் வட்டார வழக்கு பற்றி எந்தவிதக் கவனமும் இல்லாத அகராதி களாகவே இருக்கின்றன. 19ஆம் நூற்றாண்டு 20ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் வெளிவந்த அகராதிகளில் வட்டார வழக்கு பற்றி எந்தவித உணர்வும் இல்லை. மதுரைத் தமிழ்ப் பேரகராதியில் இறுதியாக இந்த மொழியில் கலந்துவிட்ட பிறமொழிச் சொற்கள், திசைச் சொற்கள், கொச்சைச் சொற்கள், பேச்சு வழக்குச் சொற்கள் என்று பின்னிணைப்பாகத் தரும்

பகுதியில்தான் வட்டார வழக்கிற்கு இடம் ஒதுக்கியிருக்கின்றனர். இந்த வட்டார வழக்குச் சொற்களுக்கு முதலில் ஒரு மதிப்பைக் கொடுத்தவர் வையாபுரிப்பிள்ளைதான். அவர் தமிழ்ப் பேரகராதியின் பதிப்பாசிரியராக இருந்ததால், ஆங்கிலத்தில் வந்திருந்த அகராதி பற்றிய நூல்களையெல்லாம் படித்து ஒரு மொழியில் சொல் வளம் எவ்வளவு முக்கியம், அச்சொல் வளத்தை எங்கிருந்தெல்லாம் திரட்ட வேண்டும் என்பதுபற்றிக் கருத்துக் கொண்டிருந்தார். அதனால் வட்டார வழக்கிற்கு முக்கியத்துவம் கொடுத்தார்.

அவர் அந்தக் காலத்தில் இருந்த ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு பிரதிநிதியை நியமித்து, அந்தப் பகுதியில் இருக்கும் சொற்களைத் திரட்டித்தரக் கேட்டிருக்கிறார். அப்படி நியமிக்கப்பட்ட ஆட்களில் சிலர் நன்றாகச் செயல் பட்டிருக்கின்றனர்; சிலர் நன்றாகச் செயல்படவில்லை. அதனால் எந்தப் பகுதியில் சிறப்பாகச் செயல்பட்டார் களோ அந்தப் பகுதியின் சொற்கள் பேரகராதியில் அதிகமாகப் பதிவாகியிருக்கின்றன; சிறப்பாகச் செயல் படாத பகுதியின் சொற்கள் பதிவாகவில்லை. உதாரணமாக நாஞ்சில் நாட்டுப் பகுதிக்கு கவிமணி பிரதிநிதியாக இருந்தார். வையாபுரிப்பிள்ளையே நாஞ்சில் நாட்டுக்காரர். கவிமணியும் சிறப்பாகச் செயல்பட்டு ஏராளமான சொற்களைத் திரட்டித் தந்திருக்கிறார். அதனால் நாஞ்சில் நாட்டு வட்டார வழக்குச் சொற்கள் அதிகமாகப் பதிவாகி இருக்கின்றன. அதே வேளையில் சேலம் பகுதியின் சொற்கள் அதிகமாகப் பதிவாகி இருக்காது. அதற்குக் காரணம் என்னவென்றால் சேலம் பிரதிநிதியாக விஜய ராகவாச்சாரியர் இருந்தார். அவருக்கு மக்களுடனான தொடர்பு, வட்டார வழக்குச் சொற்கள் மீதான ஆர்வம் இருந்ததாகத் தெரியவில்லை. இருந்தாலும் ஒப்பீட்டளவில் அதிகமான வட்டார வழக்குச் சொற்களைப் பதிவு செய்திருக்கும் அகராதி தமிழ்ப் பேரகராதிதான். அதற்குக் காரணம் வையாபுரிப்பிள்ளைதான்.

கிரியா அகராதியில் குறைவாகவே வட்டார வழக்குச் சொற்கள் பதிவாகி இருக்கின்றன. கிரியாவில் வ.வ. என்ற சுருக்கக் குறியீடு கொடுத்தே வட்டார வழக்குச் சொற் களைப் பதிவு செய்திருக்கின்றார்கள்; வட்டார நாவல் முதலான படைப்புகளிலிருந்து சொற்களை எடுத்துப் பதிவு செய்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் சொற்களைத் தேர்வு செய்வதற்கு என்ன மாதிரியான வரையறை

வைத்திருக்கிறார்கள் என்பது பற்றியும் சொல்லவில்லை. ஆனால் வட்டார நாவல் முதலானவற்றிலிருந்து முழுமையாகச் சொற்களைத் திரட்டவில்லை. அதற்கான காரணம் நமக்குத் தெரியவில்லை.

பழைய இலக்கியங்களில் வட்டார வழக்குச் சொற்களைக் கண்டறிய முடியுமா?

இன்று சில சொற்களை வட்டார வழக்குச் சொற்கள் என்று சொல்ல முடிகிறது. அவை அந்தக் காலத்தில் வட்டார வழக்குகளாக இருந்தனவா என்பது பற்றி ஒன்றும் சொல்ல முடியவில்லை. ஆனால் ஒரு மாதிரியான பிரிவுகள் இருந் திருக்கின்றன. உரையாசிரியர்கள் செந்தமிழ், கொடுந்தமிழ் என்று பிரிக்கின்றார்கள். இந்தக் கொடுந்தமிழ் வட்டார வழக்காக இருந்திருக்கலாம். அப்புறம் திசைச் சொல் என்று குறிக்கக்கூடியது வட்டார வழக்குச் சொல். அதற்கு நன்னூலின் உரை ‘அருவா நாட்டார் எருமையைப் பெற்றம் என்பார்’ என்று உதாரணம் கொடுக்கும். இந்த மாதிரியான எடுத்துக்காட்டுகளிலிருந்து ஒரு சில வட்டாரச் சொற் களைக் கண்டறிய முடிகிறது. தொல்காப்பியத்திலும் ஒன்றிரண்டு சொற்களைக் கண்டறிய முடியும்.

தொல் காப்பிய மரபியல் இளமைப் பெயர்கள், ஆண்பால் பெயர்கள், பெண்பால் பெயர்கள் ஆகியவற்றைத் தொகுக்கும் போது உலக வழக்கையும் அளவுகோலாகக் கொள்கிறது. இளமைப் பெயர்களைக் குறிப்பதற்குப் பல சொற்கள் தரப்பட்டிருக்கின்றன. அச்சொற்கள் பல வட்டாரப் பகுதிகளிலிருந்தும் எடுக்கப்பட்டிருக்கலாம். இதைப் பற்றி நானும் இளவரசும் சில கட்டுரைகள் எழுதியிருக்கின்றோம். “மூடும் கடமையும் யாடல பெறாஅ” (தொல்.பொருள்.மரபு.63) என்றொரு நூற்பா இருக்கின்றது. மூடும், கடமையும் ஆட்டின் இளமைப் பெயர்கள் என்பது இந்த நூற்பாவின் பொருள். இந்நூற்பாவிற்குப் பேராசிரியர் உரையெழுதும்போது, “மூடு என்ற சொல் இக்காலத்து வழக்கிறந்தது போலும்” என்று எழுதுவார். அவருடைய காலம் பத்து நூற்றாண்டு களுக்கு முன்பு என்று கணக்கிட்டால்கூட, அக்காலத் திலேயே ‘மூடு’ என்ற சொல் வழக்கிறந்துவிட்டது. ஆனால் இந்தச் சொல் இன்னும் கொங்கு வட்டாரப் பகுதியில் வழக்கில் இருக்கின்றது.

இங்கு ஆட்டின் பெண் குட்டியை மூட்டுக்குட்டி என்று சொல்லும் வழக்கம் இன்றும் இருக்கின்றது. இப்படி நாம் தேடினால் பழைய இலக்கியங் களில் வட்டார வழக்குச் சொற்களைக் கண்டறிய முடியும்.

வட்டார வழக்கு அகராதிகள் எதற்குத் தேவைப் படுகின்றன? அவற்றின் முக்கியத்துவம் என்ன?

உண்மையில் தமிழில் பெரிய அளவுக்குச் சொல் வளம் இருக்கக்கூடிய பகுதி இந்த வட்டார வழக்கு. இதை இன்று நாம் தொகுக்காமல் விட்டுவிட்டால் இந்தச் சொல் வளம் அழிந்து போய்விடும். இதை இன்று தொகுக்கின்ற தன் மூலமாகத் தமிழ் அகராதியில் ஏராளமான சொற் களைச் சேர்க்க முடியும். சொற்களை அதிக அளவில் சேர்த்து அகராதியைப் பெரியது பண்ணுவது மட்டும் நம் நோக்கமன்று. வட்டார வழக்குச் சொற்களிலிருந்து நிறைய சொற்களைப் பொதுவழக்கிற்குக் கொண்டுவர முடியும். அதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. ப.ரா.சுப்பிரமணியன் ‘சொல்வலை வேட்டுவன்’ என்றொரு கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியிட்டிருக்கிறார். அந்நூலில் எப்படி வட்டார வழக்குச் சொற்களைப் பொதுவழக்கிற்குக் கொண்டு வரலாம் என்பதுபற்றி ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அதில் வேற்று மொழிச் சொற்களுக்குத் தமிழ்ப் பொது வழக்கில் சொற்கள் இல்லையென்றால் வட்டார வழக்கிலிருந்து எடுத்துப் பயன்படுத்தலாம் என்று கூறுகிறார். வட்டார வழக்கிலிருந்து சொற்களை எடுப்பதற்குச் சில வரையறைகளை, விதிமுறைகளை வைக்கின்றார். கொங்கு வட்டாரச் சொற்கள் சிலவற்றை எப்படிப் பொதுவழக்கிற்குக் கொண்டுவர முடியும் என்பது பற்றியும் அக்கட்டுரையில் கூறியுள்ளார். அப்படிச் செய்யும் போது கலைச்சொற்களுக்குக்கூட வட்டார வழக்குச் சொற்கள் உதவும்; பயன்படுத்த முடியும்.

நஞ்சுண்டன் கன்னடத்திலிருந்து நாவல்கள், சிறுகதைகளை மொழிபெயர்க்கும்போது தேவைப்படுகின்ற இடத்தில் பொது வழக்குச் சொற்கள் இல்லையென்றால் வட்டார வழக்குச் சொற்களைப் பயன்படுத்துகின்றார். தேவைப்படுகின்ற இடத்தில் பொதுவழக்குச் சொற்கள் இல்லாத போது வட்டார வழக்குச் சொற்களைப் பயன்படுத்த வேண்டும். இவையும் தமிழ்ச் சொற்கள்தானே. வட்டார வழக்குச் சொற்கள் என்பதற்காக ஒதுக்க வேண்டிய

அவசியமேதுமில்லை. நான் வழக்கமாக ஓர் உதாரணம் சொல்வேன். இந்தப் பகுதியில் ‘முசுவு’ என்றொரு சொல் இருக்கின்றது. இந்தச் சொல் ஆங்கிலத்தில் ‘க்ஷரளல’ என்ற சொல்லைக் குறிக்கக் கூடியது. இந்த ‘க்ஷரளல’-க்குத் தமிழ்ப் பொதுவழக்கில் சரியான சொற்களேதும் இல்லை. இந்த ‘முசுவு’-ஐ, நாம் பொதுவழக்கிற்குக் கொண்டு வரலாம். ‘வேலை முசுவா இருக்கிறான்’ என்பது மாதிரி இந்தப் பகுதி பேச்சு வழக்கில் வருகின்றது.

தமிழ் ஓர் இரட்டை வழக்கு மொழி; பேச்சு வழக்கு வேறானதாகவும், எழுத்து வழக்கு வேறானதாகவும் இருக்கக்கூடிய மொழி. சொற்கள் எப்படியெல்லாம் பேச்சு வழக்கில் திரிபடைகின்றன என்பதை மொழியியல் அடிப்படையில் ஆய்வு செய்வதற்கு வட்டார வழக்கு அகராதி மிகப் பெரிய ஆதாரமாக இருக்கும். மொழியியல் ஆய்வு மட்டுமல்ல, சமூகவியல் ஆய்வுகளும் செய்ய முடியும்; செய்ய வேண்டும். வட்டார வழக்குச் சொற்கள் உருவாவதற்கு நிலஅமைப்பு முக்கியமானது என்று நான் நினைக்கிறேன். நிலஅமைப்பு அடிப்படையில்தான் மக்களுடைய வாழ்முறை அமைகின்றது. அதனால் நில அமைப்பு அடிப்படையில் கொங்கு வட்டாரத்திற் குள்ளேயே பேச்சு வழக்குச் சொற்களில் வேறுபாடுகளைக் காண முடியும்.

சாதிகள் ஒன்றாக இருந்தாலும் மேட்டுக் காட்டுப் பகுதியில் ஒரு மாதிரியாகவும், வயக்காட்டுப் பகுதியில் வேறு மாதிரியாகவும் சொற்கள் வழங்குகின்றன. பொள்ளாச்சிப் பகுதியிலிருந்து ஒரு நண்பர் எனக்குச் சொற்களைச் சேகரித்துக் கொடுத்தார். அப்பகுதி முழுக்க முழுக்க வாய்க்கால் பாசனப் பகுதி. அந்தப் பகுதிச் சொற்கள் நான் அறியாதவையாக, வித்தியாசமானவையாக இருந்தன. எங்கள் பகுதி மேட்டுக்காடு; பாசன வசதியற்றது. இந்தப் பகுதியில் நான் சேகரித்த சொற்கள் அவர் அறியாதவையாக, அவருக்கு வித்தியாசமானவையாக இருந்தன. நிலஅமைப்பு வேறுபடும்போது சொற்களும் மாறுபடுகின்றன.

கொங்கு வட்டார வழக்குச்சொல் அகராதி தொகுத் தலிலிருந்துதான் உங்களுக்குக் கொங்கு வட்டார நாட்டுப்புறவியல் ஆய்வு மீதான ஆர்வம் ஏற்பட்டதா?

அப்படியும் சொல்லமுடியும். நான் கல்லூரியில் நாட்டுப் புறவியல் பாடம் படித்தபோதுதான் இந்த வட்டார வழக்கு அகராதி பற்றிய ஆர்வம் தோன்றியது. பிறகு பாடல், பழமொழி, விடுகதை உள்ளிட்ட எல்லாவற்றிலுமே கவனம் செலுத்த ஆரம்பித்தேன். நான் பல்கலைக்கழகத்தில் நாட்டுப்புறவியல் பட்டயச் சான்றிதழ் படிப்பும் படித்தேன். நாட்டுப்புறவியல் சார்ந்த எல்லாவற்றிலும் ஆர்வம் இருந்தாலும்கூட ஒன்றிரண்டு விசயங்களில் மட்டும் கவனம் செலுத்த விரும்புகிறேன். குறிப்பாக இந்தப் பகுதியின் கதைப்பாடலான அண்ணன்மார் சாமி கதைப் பாடல் பற்றிக் கவனம் செலுத்துகிறேன். இந்தக் கதைப் பாடல் பற்றி நிறைய பேர் எழுதியிருக்கிறார்கள். அவ்வாறு எழுதியவர்களில் பெரும்பாலருடைய பார்வை சாதி அபிமானம் உடையதாக இருக்கின்றது என்பது எனது கருத்து. சாதி அபிமானம் இல்லாமல் பார்த்தவர்கள் மிகக் குறைவே. பிரந்தா பெக் என்ற ஆய்வாளர் வெளிநாட்ட வராக இருந்ததால் சில விசயங்களை வெளிப்படையாகப் பேசியுள்ளார். இந்தப் பகுதியிலிருக்கும் ஆய்வாளர்கள் சாதி அபிமானத்தைக் கடந்து பார்க்கவில்லை. சாதி அபிமானத்தை விட்டுவிட்டு இந்தக் கதைப் பாடலை ஆய்வு செய்ய வேண்டும் என்பதே என் விருப்பம்.

தமிழகக் கதைப்பாடல்களில் அண்ணன்மார் சாமி கதைப்பாடல் ரொம்பரொம்ப வித்தியாசமானது. கோ.கேசவன்கூட அவருடைய கதைப்பாடல் ஆய்வில் இந்தக் கதைப்பாடலை விட்டிருப்பார். காரணம் என்ன வென்றால் பொதுப்போக்கிற்குள் இந்தக் கதைப்பாடலைக் கொண்டுவர முடியாது; இந்தக் கதைப்பாடல் தனித்தன்மை மிக்கது. இந்தக் கதைப்பாடலுக்குள் பல வரலாற்று நிகழ்வுகள் புதைந்து கிடக்கின்றன. அதனால் மிக ஆழமாகவும், பல கோட்பாடுகள் அடிப்படையிலும் ஆய்வு மேற்கொள்ள வேண்டிய தேவை இருக்கின்றது. அதனால் இந்த அடிப்படையில் தொடர்ந்து அக்கதைப்பாடல் மீது கவனம் செலுத்தி வருகின்றேன். சில கட்டுரைகளும் எழுதியிருக்கின்றேன்.

இந்தப் பகுதியின் சடங்குகள் பற்றியும் எனக்கு ஆர்வம் இருக்கின்றது. சடங்குகள் பற்றிய விவரங்களைத் தொகுத்துக் கொண்டும், நாட்டுப்புறவியல், மானிடவியல் கோட்பாடுகளைப் படித்துக் கொண்டும் இருக்கின்றேன். இதைப் பற்றி இன்னும் நான் எதுவும் எழுதவில்லை. ஆனால் எழுத வேண்டும்.

அண்ணன்மார் சாமி கதைப்பாடலுக்குப் பல்வேறு பனுவல்கள் (versions) இருக்கின்றன. அவற்றையெல்லாம் எப்படிப் பார்க்க வேண்டும்?

அச்சில் வந்திருக்கின்ற பிரதிகளில் மிக முக்கியமானது சக்திகனல் பதிப்பித்த 'அண்ணன்மார் சுவாமி கதை'. சக்திகனல் தான் பதிப்பித்தற்கு அடிப்படையாக இருந்த ஏடு பற்றி ஒன்றும் சொல்லவில்லை. அவர் ஏதோ ஒரு ஏட்டை அடிப்படையாக வைத்திருக்க வேண்டும். அவர் கதைப் பாடலில் நிறைய திருத்தங்கள் செய்து பதிப்பித்து இருக்கின்றார் என்று சொல்லுவார்கள். 'அண்ணன்மார் சுவாமி கதை' என்ற தலைப்பிலேயே சிக்கல் இருக்கின்றது. இங்கு 'அண்ணன்மார் சுவாமி கதை' என்று சொல்ல மாட்டார்கள். 'குன்னுடையான் கதை' என்றே மக்கள் சொல்லுகின்றனர். மக்கள் வழக்கில் இருக்கின்ற கதைக்கும் அச்சில் வந்திருக்கின்ற பிரதிகளுக்கும் நிறைய வேறுபாடுகள் இருக்கின்றன. மக்கள் வழக்கில் உள்ள உடுக்கையடிக் கதைப்பாடல்களில் அண்ணன்மார் என்று சொல்லப் படுகிற பொன்னர் - சங்கர் ஆகியோரின் பெற்றோர்களான குன்னுடையான் - தாமரை ஆகியோரின் கதையே பெரும் பகுதி. ஆனால் அச்சில் வந்திருக்கின்றவற்றில் எல்லாம் பொன்னர் - சங்கர் கதை பெரும்பகுதியாக உள்ளது; குன்னுடையான் தாமரை கதை சிறுபகுதியாக உள்ளது. அதனால் மக்கள் வழக்கில் உள்ள கதைக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பார்க்க வேண்டும் என்று நினைக்கிறேன்.

இந்தக் கதைப்பாடலுக்கு மக்கள் வழக்கிலும் மூன்று வடிவங்கள் இருக்கின்றன. உடுக்கையடிக் கதைப்பாடலாக இருக்கின்றது. பத்து - பதினைந்து நாட்கள் நடை பெறுகின்ற உடுக்கையடிப் பாடலும், கூத்தும் கலந்த வடிவம் மற்றொன்று. இன்னொன்று முழுக்க கூத்து

வடிவமாக இருக்கின்றது. இந்தக் கூத்து ஒரு நாளுக்குள் நடத்தி முடிக்கும்படியான வடிவமாகவும் வைத்திருக் கின்றனர். இந்த மூன்று வடிவங்களைப் பதிவு செய்து, இவற்றை ஆய்விற்கான ஆதாரமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்று நினைக்கிறேன்.

அச்சில் வந்திருப்பவற்றில் சக்திகனல் பதிப்பு தவிர, பெரிய எழுத்து கள்ளழகர் அம்மானை இருக்கின்றது. இதை இரத்தின நாயக்கர் அன்ட் சன்ஸ் வெளியிட்டிருக் கிறார்கள். இதுவும் இல்லாமல் அச்சில் வந்த வேறு சில பிரதிகளும் இருக்கின்றன. அப்புறம் பிரந்தா பெக் எருசலம்பட்டி இராமசாமி என்பவரிடம் பதிவு செய்த ஒன்று இருக்கின்றது. அது பாட்டும் கதைச்சொல்லலும் கலந்து வரும். இதை ஆசியவியல் நிறுவனம் அவருடைய ஆங்கில மொழிபெயர்ப்புடன் வெளியிட்டிருக்கின்றது. இவற்றையெல்லாம் வைத்துக்கொண்டுதான் பார்க்க வேண்டும்.

இந்தக் கதைப்பாடல் பற்றி இன்று எழுத்துத் துறையிலும், திரைப்படத் துறையிலும் சித்திரிக்கும்போது வெறும் பங்காளி சண்டை என்று சித்திரிக்கின்றார்கள். இந்தச் சித்திரிப்பு சாதிகளைப் பகைத்துக் கொள்ளக் கூடாது என்ற இன்றிருக்கக்கூடிய தேவையை ஒட்டியதாக இருக்கலாம். ஆனால் இந்தக் கதைப்பாடல் இரண்டு சாதி களுக்கு இடையிலான போராட்டம். சாதிகளுக்கிடை யிலான போராட்டம் என்பதைவிட இந்தப் பகுதியில் பூர்வக்குடிகளாக இருந்த வேட்டுவர்களுக்கும், வேறு பகுதியிலிருந்து வேளாண் தொழில்நுட்ப அறிவுடன் வந்த வேளாளர்களுக்கும் இடையிலான போராட்டம். இந்தக் கண்ணோட்டத்தில்தான் இந்தக் கதைப் பாடலை முழுமையாக ஆய்வு செய்ய வேண்டும் என்று நினைத்திருக்கிறேன்.

இப்படிப் பார்க்கும்போது நிறைய விசயங்கள் தெளிவாகின்றன. வேட்டுவர்கள் இந்தப் பகுதி வனமாக, காடாக இருந்தபோது காடு சார்ந்து வாழ்ந்த மக்கள். வேளாளர்கள் வனத்தை அழிக்கின்றார்கள்; வேளாண் நிலமாக்குகின்றார்கள். வேட்டுவர்களுக்கும், வேளாளர் களுக்கும் வாழ்நிலம் அடிப்படையில் தீராப்பகை எழுகின்றது.

அப்படியென்றால் கொங்குப் பகுதியில் இருக்கின்ற வேளாளர்கள் வேறு பகுதியிலிருந்து வந்தவர்கள் என்று சொல்லுகின்றீர்களா?

ஆமாம். அப்படித்தான் நினைக்கிறேன். இந்த விசயத்தை நான் மட்டும் சொல்லவில்லை. எனக்கு முன்பே பலர் சொல்லி இருக்கின்றனர். இந்த விசயத்தில் இரண்டு கருத்துப்போக்குகள் உள்ளன. ஒன்று வேளாளர் வேற்றுப் பகுதியிலிருந்து வந்தவர்கள். மற்றொன்று பூர்வ குடிகள். புலவர் செ.ராசு கொங்கு வேளாளர்கள் வேற்றுப் பகுதியிலிருந்து வந்தவர்கள் என்பதில் தீவிர நம்பிக்கை உடையவர்; தீவிரமாக ஆதரிக்கின்றவர். எந்தப் பகுதி யிலிருந்து வந்தார்கள் என்பதில் கூட இரண்டு கருத்துப் போக்குகள் உள்ளன. சிலர் தஞ்சைப் பகுதியிலிருந்து வந்தவர்கள் என்கிறார்கள். சிலர் காஞ்சிப் பகுதியிலிருந்து வந்தவர்கள் என்கிறார்கள். காஞ்சிபுரம் பகுதியிலிருந்து வந்ததற்குப் புலவர் செ.ராசு சில வாதங்களை முன் வைக்கின்றார். காஞ்சிக்கோயில் போன்று ஊர்ப் பெயர்களே அந்தப் பகுதியிலிருந்து வந்த நினைவுகளைத் தாங்கி நிற்கின்றன என்று கூறுவார். எந்தப் பகுதியிலிருந்து வந்தார்கள் என்பதில் ஒத்த கருத்து இல்லையானாலும், வெளியிலிருந்து வந்தவர்கள் என்ற கருத்தில் பல ஆய்வாளர்கள் தீவிரமாக உள்ளனர். இக்கருத்தை மறுத்து பூர்வக்குடிகள் என்று கூறும் ஆய்வாளர்களும் இருக் கின்றார்கள். புலவர் குழந்தை போன்றவரெல்லாம் அம்மாதிரியான கருத்தை உடையவரே.

அண்ணன்மாரோடு தொடர்புடைய முப்பூசை என்ற சடங்குப்பலி பற்றிக் கூறுங்கள்...

முப்பூசை அண்ணன்மாருக்கு மட்டுமே செய்வ தில்லை. சில காட்டுக் கருப்பு முதலான தெய்வங்களுக்கும் முப்பூசை போடுவார்கள். ஆடு, பன்றி, கோழி ஆகிய வற்றைப் பலியிடுவது முப்பூசை. இதில் பன்றி பலியிடுவது என்பது முக்கியமான விசயம். அண்ணன்மார் சாமி கதையில் பன்றி ஒரு முக்கிய இடம்பெறுகிறது. பொன்னர் - சங்கர் தலையூர் காளியோடு சண்டையிடுவதற்குப் பன்றிதான் காரணமாக அமைகின்றது. தலையூர் காளியின் பன்றி இவர்கள் நிலங்களில் அழும்பு பண்ணுகிறது. இதைப் பற்றி 'அண்ணன்மார் கதையில் பன்றி' என்றொரு கட்டுரை எழுதியுள்ளேன். அதில் பன்றி ஒரு குறியீடு என வாதித்துள்ளேன். பன்றி வனத்தில் வாழக் கூடியது. வேளாண்மைக்கு அழிவு விளைவிக்கக்கூடியது. ஆகவே வேளாளர்கள் இயல்பாகவே

பன்றிக்கு எதிரானவர்களாக இருக்கின்றார்கள். ஆனால் வனத்தைச் சார்ந்து வாழும் வேட்டுவர்கள் பன்றிக்கு ஆதரவானவர்களாக இருக் கின்றார்கள். ஆகவே இந்த இரு பிரிவு மக்களுக்குமான குறியீடாகப் பன்றி இருக்கின்றது. அதனாலே முப் பூசையில் பன்றி இடம்பெறுகிறது.

முன்பெல்லாம் முப்பூசையின்போது பன்றி குத்தும் சடங்கே நடைபெறும். இன்று சில இடங்களில் பன்றி குத்துவது போன்ற பாவனைச் சடங்காக நடைபெறுகிறது. மோளிப்பள்ளி கோயிலில் ஒரு ஆள் பன்றி போல நடிப்பதும், அந்த ஆளை இன்னொரு ஆள் குத்துவது போன்றும் சடங்கு நடைபெறுகின்றது. இன்று வேளாளர் சாதியில் பன்றிக் கறி தின்பது விரும்பப்படாததனால் இது பாவனைச் சடங்காக மாறிவிட்டது என்று நினைக்கிறேன்.

கொங்குப் பகுதியில் நடைபெறும் வேறு வகைச் சடங்குகள்பற்றிக் கூறுங்கள்...

கொங்கு வேளாளர் உள்ளிட்ட இந்தப் பகுதியில் வேறு இடைநிலைச் சாதிகளின் திருமணம் உள்ளிட்ட வாழ்க்கை வட்டச் சடங்குகளில் பார்ப்பனர் இடம் பெறுவதில்லை. இங்குப் பார்ப்பனர் குடியிருப்புகளே மிகக் குறைவு. சோழ நாட்டில் இருப்பது போன்று இங்குப் பாடல் பெற்ற பெரிய தலங்களும் இல்லை. அங்கிருப்பது போன்ற அதிகாரம் பெற்ற கோயில்களை இங்குக் காண முடிவதில்லை. இங்குச் சின்னசின்ன குன்றுகள், கரடுகள் ஆகியவற்றில் பெருந்தெய்வக் கோயில்கள் இருக்கின்றன. இங்கு நீர் வளமும், நில வளமும் குறைச்சல். அதனால் பார்ப்பனர்கள் இங்கு அதிகம் இல்லை; சடங்குகளையும் அவர்கள் நடத்துவதில்லை.

இக்காலத்தில் நகர்மயம் வளர்ச்சியடைந்தபோது நகரத்தில் வசிப்பவர்கள் கவுரவத்திற்காகப் பார்ப்பனர் களைக் கொண்டு சடங்குகளைச் செய்கின்றனர். இப்போது கோயில்களில் திருமணம் செய்வது அதிகரித்து வருகிறது. அங்குப் பார்ப்பனர்கள் வந்துவிடுகின்றனர். கிராமக் கோயில்களுக்குப் பார்ப்பனரை வைத்து கும்பாபிசேகம் செய்வது இன்று வந்தாகிவிட்டது. பத்து இருபது

வருடங் களுக்கு முன்பெல்லாம் அப்படி நடைபெறவில்லை. அப்போது பார்ப்பனர் எண்ணிக்கையே இங்குக் குறைச்சல்.

இங்கு நடைமுறையில் இருந்த, இருக்கும் சடங்கு களின் மூலம் சங்க இலக்கியங்களில் சொல்லப்பட்டிருக்கும் சடங்குகளைப் புரிந்துகொள்ள முடியும் என்று நினைக் கிறேன். அதனால் அவற்றின் மீது கவனம் செலுத்தி வருகின்றேன்.

இந்தப் பகுதியின் வட்டார ஆய்வு மீது கவனம் செலுத்திக் கொண்டிருக்கும்போது தான் தி.அ. முத்துசாமிக் கோனாரின் 'கொங்கு நாடு' நூலைப் பதிப்பித்தீர்களா...?

ஆமாம். கொங்கு வட்டாரப் பகுதி பற்றிய ஆய்வின் மீது நான் ஆர்வம் செலுத்தும்போது, ஏற்கெனவே வெளிவந்திருக்கும் எழுத்துகளைத் தேடினேன். அப்போது அதில் அதிகமாக வேலை செய்த தி.அ.முத்துசாமிக் கோனார் பற்றி எனக்குத் தெரியவந்தது. அவரைப்பற்றி ஏற்கெனவே சிறுசிறு குறிப்புகள் எழுதி இருக்கின்றனர். புலவர் செ.ராசு, புலவர் குழந்தை போன்றோர் அவரை மேற்கோள் காட்டியிருக்கின்றனர். அவர்கள் அவரைப் பெருமளவுக்குக் கவனப்படுத்தவில்லை. ஆனால் கவனப்படுத்தப்பட வேண்டிய ஆள் அவர்.

முத்துசாமிக் கோனார் கொங்கு நாட்டு வரலாறு எழுதியிருக்கிறார். இந்தப் பகுதி இலக்கியங்களைப் பெரிய முயற்சி எடுத்துப் பதிப்பித்திருக்கின்றார். கொங்குநாட்டு வரலாறு பற்றி அவர் எழுதிய 'கொங்குநாடு' என்ற நூல் வெளியானது, அல்லது வெளிவரவில்லை என்று சொல்லு கிறார்கள். அப்போது அவர் 'கொங்குவேள்', 'கொங்கு மண்டலம்' என்ற இதழ்களில் 'கொங்கு நாடு' பற்றித் தொடராக எழுதியிருக்கின்றார். குறிப்பிட்ட காலத்திற்குப் பின்பு அவருக்குக் கண் தெரியாமல் போய் விடுகிறது. அதனால் தொடரை நிறுத்திவிடுகிறார். அவர் தொடராக எழுதி இதழில் அச்சுக் கோத்ததை வீணாக்காமல், அதையே புத்தகத்திற்கான பாரமாகவும் அச்சடித்து வைத்திருந்திருக்கின்றார். அப்படி வைத்திருந்த பிரதியின் பைண்டிங்

சில பேரிடம் இருந்தது. இப்படி 'கொங்குநாடு' நூல் பதிப்பாக வெளிவராமலே சிலரிடம் இருந்தது.

'கொங்குநாடு' பற்றி தி.அ.முத்துசாமிக் கோனாருடைய எழுத்து மிக முக்கியமானது. அந்தக் காலத்திலேயே அவருக்கு வரலாற்றுணர்வு இருந்தது. அவர் புராணக் கதைகள், வாய்மொழித் தரவுகள், கல்வெட்டுகள் என்று எல்லாவிதமான ஆதாரங்களையும் வரலாறு எழுது வதற்குப் பயன்படுத்துகிறார். கார்மேகக் கவிஞர் எழுதிய கொங்கு மண்டல சதகத்திற்கு ஓர் உரை எழுதியிருக்கின்றார். அந்த உரை ஓர் அற்புதமான உரை. அந்த உரை அவருடைய புலமையை வெளிப்படுத்தக் கூடியது. அதே புலமையை இந்த 'கொங்குநாடு' நூலிலும் பார்க்க முடியும். அதனாலே தான் இந்த நூல் அவசியம் பதிப்பிக்கப்பட வேண்டும் என்று நினைத்தேன்; அச்சில் கொண்டுவந்தேன். அச்சில் கொண்டு வருவதற்கு நிறைய சிக்கல்கள் இருந்தன. அதனால் அந்த நூல் அச்சில் வந்திருக்கின்றது என்றுதான் சொல்ல முடியும். நல்ல பதிப்பாக வரவில்லை. நல்ல பதிப்பாகக் கொண்டுவர முயன்று வருகிறேன்.

தி.அ.முத்துசாமிக் கோனார் சிறப்பு, முக்கியத்துவம் என்ன?

அவருடைய சிறப்பு என்னவென்றால், அவர் இந்தப் பகுதியின் எல்லா இடங்களுக்கும் சென்றிருக்கின்றனர். புதிதாக ஓர் ஊரைக் கேள்விப்பட்டால் அந்த ஊரை உடனே சென்று நேரில் பார்த்துவிடுவார்.

1857-இல் பிறந்து 1944-இல் மறைந்தவர் முத்துசாமிக் கோனார். 1900க்கு முன்பு சைவம் சார்ந்த ஈடுபாடு உடையவராக விளங்கினார். பின்பு வட்டாரம் மீது ஆர்வம் காட்டத் தொடங்கினார். அந்தக் காலத்தில் கல்வெட்டுகள் பற்றியெல்லாம் பெரிதாக அக்கறை காட்டப்படவில்லை. ஆனால் முத்துசாமிக் கோனார் திருச்செங்கோடு பகுதியின் கல்வெட்டுகளையெல்லாம் படியெடுத்திருக்கிறார்.

அவர் திருச்செங்கோடு பகுதியின் இருபத்தைந்து இலக்கியங்களைப் பதிப்பித்திருக்கின்றார். இப்படி வட்டார வரலாற்றுக்கான சான்றுகளைப் பத்திரப்படுத்தி யுள்ளார். மிகுந்த முக்கியத்துவம்

வாய்ந்த முன்னோடியாக இந்தப் பகுதியில் தி.அ.முத்துசாமிக் கோனார் விளங்கினார்.

பழைய இலக்கியப் பதிப்புகள் மீதான உங்கள் ஆர்வம் பற்றிச் சொல்லுங்கள்...

நான் பதிப்புகள் தொடர்பாகப் பத்து - பதினைந்து கட்டுரைகள் எழுதியுள்ளேன். அவை இப்போது 'பதிப்புகள் - மறுபதிப்புகள்' என்ற தலைப்பிலான நூலாக வெளிவர உள்ளன.

நாமக்கல் வந்த பிறகுதான் எனக்குப் பழைய இலக்கியப் பதிப்புகள் தொடர்பாகப் பெரிய விழிப்புணர்வு வந்தது. அதற்கு முக்கியமான காரணம் பொ.வேல்சாமி. அவருடன் பேசும்போதுதான் இந்தப் பதிப்பு எவ்வளவு முக்கியமானது என்று தெரியவந்தது. பிறகு அதனுள் சென்று பார்க்கும்போது பதிப்புகள் தொடர்பாக ஆய்வு செய்வதற்கும், புதிய பதிப்புகள் கொண்டு வருவதற்கும் ஏராளம் இருக்கின்றது என்று உணர்ந்தேன். அதற்குப் பிறகுதான் பதிப்புகளை மையப்படுத்தியே பல கருத்தரங்குகளுக்குக் கட்டுரைகள் எழுதினேன்.

நம் தமிழ், செம்மொழி; இரண்டாயிரம் ஆண்டு இலக்கியப் பாரம்பரியம் உள்ள மொழி என்றெல்லாம் பேசிவருகிறோம். ஆனால் நம் மொழியிலேதான் பதிப்பு தொடர்பான உணர்வு மிகமிகக் குறைச்சலாக இருக் கின்றது. இதை நான் பல இடங்களில் சொல்லி வருகிறேன். இவ்வளவு இலக்கியங்கள் உள்ள மொழியில் பதிப்பியல் எவ்வளவு வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும். ஆனால் இங்குப் புதியவர் ஒருவர் பதிப்பு நுட்பங்களை அறிந்து கொள்வதற்கான நல்ல நூல்கூடக் கிடையாது. அவர் பழைய நல்ல பதிப்பாசிரியர்களின் பதிப்புகளைப் பார்த்துதான் அவற்றைக் கற்றுக்கொள்ள வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. 19-ஆம் நூற்றாண்டிலும், 20-ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்திலும் நம் பதிப்பு வளர்ச்சி உச்ச கட்டத்தில் இருந்த நேரம். அந்தக் காலத்தில், இன்றிருப்பது போன்ற வசதிகள் இல்லாத காலத்தில் அவர்கள் பயன்படுத்திய பதிப்பு நுட்பங்களை இன்று இழந்து விட்டோம் என்று தோன்றுகிறது. இன்று பழைய பதிப்பு களைப் புரிந்துகொள்வதற்கு அனுபவம் தேவைப்படுகிறது.

பழைய பதிப்புகளை இன்று மறுபடியும் பதிப்பிக்கும் போது பல விசயங்களை நீக்கி விடுகிறார்கள். இப்போது வை.மு.கோ. கம்பராமாயணப் பதிப்பை வெளியிடும்போது அருஞ்சொல் அகராதியை நீக்கி விடுகிறார்கள். அருஞ் சொல் அகராதி தேவை இல்லையென்றால் ஏன் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள்? இன்று பொருளடைவு, பாட்டு முதற்குறிப்பு அகராதிகளைக்கூட நீக்கிவிடுகிறார்கள். அப்போது நமக்குப் பதிப்புபற்றிய உணர்வு குறைந்து வருவது தெரிகிறது.

நாம் பழைய பதிப்புகளைப் பார்த்தோம் என்றால் ஒரு வளர்ச்சி தெரியும். சி.வை.தா-வுக்கும் வையாபுரிப் பிள்ளைக்கும் இடையில் ஒரு தெளிவான வளர்ச்சியைப் பார்க்க முடிகின்றது. ஆனால் 1950களுக்குப் பிறகு ஒன்றிரண்டு பதிப்புகளைத் தவிர, பதிப்பு வளர்ச்சியைப் பார்க்க முடியவில்லை. பதிப்பு வளர்ச்சி தேங்கிப் போய்விட்டது; இன்னும் சொல்லப் போனால் சீரழிந்து போய்விட்டது. இங்குப் பதிப்பகத்தார்களே பதிப்பா சிரியர்கள் ஆகிவிட்டனர். பதிப்பகத்தாருக்கும் பதிப்பாசிரி யருக்கும் உள்ள வேறுபாடுகளைக்கூட மறந்துவிட்டோம். நாம் ஒரு முக்கியமான துறையைக் கோட்டைவிட்டு விட்டோம். அதனாலேயே இந்தத் துறையின் மீது கவனம் செலுத்த ஆரம்பித்தேன்.

1950-களுக்குப் பின்னர் பல கல்வி நிறுவனங்களில் தமிழ்த்துறை அமைக்கப்பட்டிருக்கின்றது. தமிழியல் கல்வி வளர்ச்சியடைந்திருக்கின்றது. பிறகு எப்படிப் பதிப்பில் இவ்வாறான நிலைமை ஏற்பட்டது?

தமிழியல் கல்வி பரவலாகியிருக்கின்றது; கல்வித்துறை வளர்ச்சியடைந்திருக்கின்றது. ஆனால் புலமை வளர்ச்சி யடைந்ததாகத் தெரியவில்லை. புலமை வளர்ச்சியில் தொடர்ச்சி இருப்பதாகத் தெரியவில்லை.

கல்வி நிறுவனங்கள் வளர்ச்சி அடைந்திருக்கின்றன. நிறைய பேராசிரியர் பதவிகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் அவை வெறும் வேலை, ஊதியம் என்பதை மட்டும் இலக்காகக் கொள்கின்றன.

1950களுக்கு முன்னால் பார்த்தோம் என்றால் தகுதியுடையவர்கள் தமிழ்ப் பேராசிரியர் பதவிகளுக்கு வந்திருக்கின்றார்கள். அப்போது கல்வித் தகுதி பெரிய விசயமாக இல்லை. வையாபுரிப்பிள்ளையோ, தெ.பொ.மீ. யோ பார்த்தீர்களானால் துறை சார்ந்த பெரிய கல்வித்தகுதி உடையவர்கள் இல்லை. ஆனால் மிகமிகப் பெரிய புலமைப் பாடு மிக்கவர்கள். 1950களுக்குப் பிறகு நிறுவனங்களில் கல்வித் தகுதியைத்தான் பார்க்கின்றார்களே தவிர புலமையைப் பார்க்கவில்லை. அப்புறம் அவர்களுடைய முக்கியமான வேலையாகக் கற்பித்தல் மாறிவிட்டது. படைப்பு, ஆய்வு, பதிப்பு போன்ற சுயமான வேலை களுக்கான மதிப்பு குறைந்து போய்விட்டது.

நிறுவனமயப்படும்போது ஒரு துறை சீரழிந்து போய்விடுகிறது என்பதுதான் நமது அனுபவம். அது இங்கும் நடந்திருக்கிறது. இன்னொரு விசயம் நமது சமூகம் குறைந்த வளர்ச்சியுடையது. தனக்குத் தேவையான எதையும் நமது சமூகம் கோரிப் பெறுவதில்லை. பொருளடைவோ, அருஞ்சொல் அகராதியோ இல்லாத பதிப்பை வாங்க மாட்டோம் என்று சொல்லக்கூடிய உணர்வு படித்தவர்களுக்கே இல்லை. அவர்களுமே எந்தப் பதிப்பு விலை குறைவாக இருக்கின்றதோ அதை வாங்குகிறார்கள். ஒரு புத்தகம் வாங்குவதற்கான அளவு கோல் விலை அன்று.

ஒவ்வொருவருக்கும் உள்ள தேவையின் அடிப் படையில் பலவிதமான பதிப்புகள் உண்டு. மாணவர் களுக்கான பதிப்பு, பாடநூலுக்கான பதிப்பு, பொது வாசகர்களுக்கான பதிப்பு, ஆய்வுக்கான பதிப்பு என்று ஒவ்வொரு தரப்பினருக்கான பல்வேறு வகைப் பதிப்பு பற்றிய உணர்வும் நம்மிடம் வளர்ச்சியடையவில்லை. இதனாலும் வாசகர் புத்தகத்தைத் தேர்ந்தெடுத்து வாங்குவதில் சிக்கல் இருக்கின்றது. இந்தச் சிக்கலைப் பயன்படுத்திக் கொண்டு பதிப்பகத்தார்கள் எதையாவது அச்சிட்டுப் பணம் பண்ணுகின்றனர்.

இன்னொரு காரணமும் உண்டு. கல்வி, படிப்பு எல்லாம் பார்ப்பனர்களுக்கு உரியது என்ற உணர்வு நம்மிடம் இருக்கிறது. மற்ற சாதிகளிடையில் ஒருவர் நூலகம் வைத்திருப்பதே வியப்புக்குரியதாக இருக்கின்றது. மற்ற சாதிகளுக்கும் கல்வி,படிப்பு எல்லாம் ஒரு சொத்து என்ற எண்ணம் இன்று வரைக்கும் கிடையாது. கல்வி எல்லோருக்கும்

உரிய சொத்து என்ற எண்ணம் வளர வேண்டும். பல்வேறு தரப்பாருக்கும் உரிய பதிப்பு பற்றிய எண்ணம் வளர்ச்சியடைய வேண்டும். அப்போது பதிப்புத் துறையில் மறுமலர்ச்சி ஏற்பட வாய்ப்பு உண்டாகும்.

சென்ற நூற்றாண்டுகளில் பதிப்புத் துறையில் செயல்பட்டவர்கள்பற்றிக் கூறுங்கள்...

19-ஆம் நூற்றாண்டில் பல பேர் இருந்திருக்கின்றனர். இன்று நாம் ஆறுமுக நாவலர், சி.வை.தாமோதரம் பிள்ளை, உ.வே.சாமிநாத ஐயர் ஆகியோரைப் பிரதானப் படுத்திப் பேசுகிறோம். ஆனால் இப்போது உள்ளே சென்று பார்க்கையில் இன்னும் பல பேர் இந்தப் பதிப்புத் துறையில் ஈடுபட்டிருக்கிறார்கள்; சிறப்பாகச் செயற் பட்டிருக்கிறார்கள் என்பதும் தெரியவருகிறது. அவர்கள் எல்லாம் பேசப்படாமல் போய்விட்டார்கள். அவர்கள் பேசப்படாமல் போனதற்கு அரசியல் மட்டுமே பிரதான காரணம் என்று சொல்ல முடியாது. நம் சமூகத்தின் அசட்டைத் தன்மையும் ஒரு காரணம். இன்றைக்கும் மைய நீரோட்டத்தில் இருக்கக்கூடிய இலக்கியங்களைப் பதிப்பித்தவர்களை மட்டுமே பதிப்பாசிரியர்களாகப் பொருட்படுத்திப் பேசிக் கொண்டிருக்கிறோம். அப்படித் தான் சி.வை.தா., உ.வே.சா., வையாபுரிப்பிள்ளை ஆகியோரைப் பற்றிப் பேசுகிறோம். அப்படியில்லாமல் ஏராளமான சிற்றிலக்கியங்கள் இருக்கின்றன. தொல் காப்பியம், நன்னூல் தவிர பல இலக்கண நூல்கள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் யார் பதிப்பித்தார்கள்? இப்படிப் பார்க்கும்போது பலவிதமான ஆட்கள் தெரியவருவார்கள்.

மு.அருணாசலம் தன்னுடைய இலக்கிய வரலாற்றில் ஒன்றிரண்டு தொகுதிகளைத் தவிர, மற்றவற்றில் எல்லாம் நூல் பதிப்பு தொடர்பான விவரங்களைத் தந்திருக்கின்றார். அதில் பலவிதமான மனிதர்கள் தென்படுகிறார்கள். அப்படிப் பார்க்கும்போது சந்திரசேகர கவிராஜ பண்டிதர் என்ற ஒருவர் நிறைய இலக்கண நூல்களைப் பதிப்பித்தார் என்று தெரியவருகிறது. அவர் ஒரு முக்கியமான மனிதர். நன்றாகப் பதிப்பித்திருக்கிறார். நிறைய நூல்களை முதன்முதலாகவும் பதிப்பித்து இருக்கிறார். அவரைப் பற்றி உ.வே.சா. 'தியாகராஜசெட்டியார்

வரலாற்றில்' ஒரு சிறு பகுதி எழுதியிருக்கிறார்; அவரைக் கேலி செய்யும் விதமாக எழுதியிருக்கிறார். கும்பகோணம் கல்லூரியில் தியாகராஜ செட்டியார் ஒரு வருடமோ, ஆறுமாதமோ விடுமுறையில் சென்று விடுகிறார். அந்த வேளையில் சந்திரசேகர கவிராஜ பண்டிதரை அவருடைய இடத்தில் வேலை செய்யச் சொல்லுவார்கள்.

அவர் திரும்ப வந்தவுடன் இவர் விலகுகிறார். விலகும்போது கல்லூரியின் முதல்வரான வெள்ளைக்காரரிடம் நற்சாட்சிப் பத்திரம் கேட்கிறார். அந்த வெள்ளைக்காரர் ஆங்கிலத்தில் நற்சாட்சிப் பத்திரம் கொடுக்கிறார். அதை மகிழ்ச்சியுடன் வாங்கிக் கொண்டு வந்து, மற்றவர்களிடம் கவிராஜ பண்டிதர் காட்டுகிறார். அதைப் பார்த்து மற்றவர்கள் நகைக்கின்றனர். அதில் 'பெரும்பண்டிதராகிய தியாகராஜ செட்டியார் செய்த பணியை இவரும் சில காலம் செய்தார்' என்றிருக்கும். இதைப் பற்றி உ.வே.சா. கூறும் போது 'இது கவிராஜப் பண்டிதருக்குக் கொடுத்த நற்சாட்சிப் பத்திரம் அன்று; தியாகராஜ செட்டியாருக்குக் கொடுத்தது' என்று கிண்டல் செய்வார். அவர் நிறைய இலக்கண நூல்களைப் பதிப்பித்திருக்கிறார் என்பது அருணாசலம் நூலிலிருந்து தெரிய வருகிறது. அவர் யார், அவருடைய பதிப்பின் சிறப்பு என்ன என்பது பற்றியெல்லாம் நமக்கு ஒன்றும் தெரியாது. இது மாதிரி பல பேர் இருந்திருக்கின்றனர். சிற்றிலக்கியங்கள் என்றால், முக்கூடற்பள்ளுவை யார் முதன்முதலாகப் பதிப்பித்தவர்? குற்றாலக்குறவஞ்சியைப் பதிப்பித்தவர் யார்? இப்படியான கேள்விகளை எழுப்பினால் பல பேரைத் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கும். இப்படி நாம் பேசினால்தான் நம் பதிப்பு வரலாறு முழுமை பெறும். நம்மிடம் பதிப்பு வரலாறு என்ற ஒன்றே இல்லை. நாம் திரும்பத்திரும்ப சி.வை.தா., உ.வே.சா. என்று பேசிக் கொண்டிருக்கிறோமே தவிர மற்றவர்களைப் பற்றிப் பேசுவதில்லை. உ.வே.சா.வுக்கு முக்கியத்துவம் கிடைத்ததற்குக் காரணம் அவர் பிறந்த சாதி. அப்புறம் அவர் செய்த வேலை.

உ.வே.சா. செய்த வேலைக்கு ஏற்ப அவருக்குத் தமிழ்ச் சமூகத்தில் மதிப்பும் மரியாதையும் கிடைத்தது. அது அதிகம் என்று எனக்குத் தோன்றவில்லை. அவருக்குக் கிடைத்தது போலவே இன்னும்

பலருக்கும் கிடைத்திருக்க வேண்டும். பல பேருக்கு மதிப்பு கிடைக்காமல் போனதற்குக் காரணம் அவர்கள் பொருட்படுத்தப்படாத சாதிக்காரர்கள் என்பதுவோ, மைய நீரோட்டத்தில் வராத புத்தகங்களைப் பதிப்பித்தவர்கள் என்பதுவோ ஆகும். நாம் முறையான பதிப்பு வரலாற்றை எழுதினோம் என்றால் இந்த மாதிரியான ஆட்களையெல்லாம் முக்கியப்படுத்தி எழுத வேண்டி யிருக்கும். ஆனால் அவர்கள் பதிப்பித்த பதிப்புகள் நம்மிடையே இருக்கின்றனவா என்பதும் சந்தேகமே. ஏனென்றால் ஆவணப்படுத்திப் பாதுகாக்கும் பழக்கமும் நம்மிடம் இல்லை. அதனால் பதிப்பு வரலாறு எழுதுவது என்பதும் சிக்கலான ஒன்றாக இருக்கின்றது.

நான் முத்துசாமிக் கோனார்பற்றி எழுதும்போது அவர் பதிப்பு நுட்பங்களையெல்லாம் எழுதியிருக்கிறேன். அவர் இருபதுக்கும் மேற்பட்ட நூல்களைப் பதிப்பித்து இருக்கிறார். அவர் போல எல்லா வட்டாரங்களிலும் இருந்திருப்பார்கள். அப்புறம் நிகண்டுகள் பதிப்பித்தவர் களையெல்லாம் தேட வேண்டும். இப்படிப் பல பேரைப் புதிதாகக் கண்டுபிடிக்க வேண்டும்.

சி.வை.தா., உ.வே.சா. ஆகிய இருவரும் பதிப்பு வரலாற்றில் பெறும் இடம் என்ன?

நான் முன்பே கூறியபடி அவர்கள் மைய நீரோட்டத்தில் இருந்த இலக்கியங்களைப் பதிப்பித்தவர்கள். அப்புறம் அவர்களுடைய நோக்கமும் முக்கியமானது.

சி.வை.தா.வின் நோக்கம் தமிழ் இலக்கியங்களை அழியாமல் பாதுகாக்க வேண்டும் என்பதுதான். ஓலைச் சுவடிகளில் இருந்தால் தமிழ் இலக்கியங்கள் அழிந்து போய்விடும். அவற்றை அச்சுக்குக் கொண்டு வந்துவிட வேண்டும் என்பது அவர் நோக்கம். இதற்கு மேலாகவும் சி.வை.தா.வுக்கு ஓர் உணர்வு இருந்தது. இதைப் பற்றிப் பலர் எழுதியிருக்கின்றனர். அவருக்குத் தமிழ்த் தேசிய உணர்வு இருந்தது; திராவிட உணர்வு இருந்தது. இந்த உணர்வோடு இருந்த ஒரே பதிப்பாசிரியர் அவர் மட்டுமே.

ஆறுமுக நாவலருக்கு சைவ சமய உணர்வு இருந்தது. உ.வே.சா.வுக்கு அப்படிப்பட்ட உணர்வு ஒன்றும் இல்லை. அவர் ஒரு தமிழ் நூலை அதுவாகவே மட்டும் பார்ப்பவர். தமிழ் நூல்களில் எது செல்வாக்குப் பெறும் நூல் என்பதிலும் அவருக்கு ஆர்வமும், கவனமும் இருந்தது. சி.வை.தா.வுக்குக் கிடைக்காத வாழ்நாள் உ.வே.சா.வுக்குக் கிடைக்கிறது. இதைப் பற்றி வையாபுரிப்பிள்ளை நன்றாக எழுதியுள்ளார். உ.வே.சா.வுக்குக் கிடைத்த வாழ்நாளின் மூலம் அவருடைய பதிப்புகளை மேலும் மேலும் வளர்த்து திரும்பப் பதிப்பிப்பதற்கு அவருக்கு வாய்ப்பு கிடைத்தது. உ.வே.சா. படிக்கக்கூடிய வாசகர் நோக்கிலிருந்துதான் எப்போதும் பதிப்பைத் தயாரிப்பார். அவருடைய முதல் சீவகசிந்தாமணி பதிப்பையும் இறப்புக்கு முன் வெளியிட்ட மூன்றாம் சீவகசிந்தாமணி பதிப்பையும் பார்க்கும்போது இதைத் தெளிவாக அறிந்துகொள்ள முடியும்.

வையாபுரிப்பிள்ளையிடம் காணப்படும் பதிப்பு வளர்ச்சிபற்றிச் சொல்லுங்கள்...

உ.வே.சா.விடம் காணப்படும் வாசகர் நோக்கிலான பதிப்பு என்ற கருத்தாக்கத்திற்குப் பிறகு, வையாபுரிப் பிள்ளையிடம் ஆய்வு நோக்கிலான பதிப்பு என்ற கருத் தாக்கத்தைக் காண்கிறோம். வையாபுரிப் பிள்ளையின் ‘பாட்டும் தொகையும்’ அப்படிப்பட்ட பதிப்பு. அதில் ஆசிரியர் அகர வரிசையில் பாடல்களை அமைத்திருக் கிறார். அதன் மூலம் ஒரே புலவருடைய பாடல்களை ஆய்வாளர்கள் எளிதாகப் பெற்றுக்கொள்ள முடியும். அப்புறம் நிறுத்தல் குறிகள் பற்றிய உணர்வு பத்தொன் பதாம் நூற்றாண்டிலேயே இருந்திருந்தாலும், அவற்றைத் தீவிரமாக நடைமுறைக்குக் கொண்டு வருகிறார் வையாபுரிப்பிள்ளை. நிறுத்தல் குறிகளை அச்சில் எப்படிப் பயன்படுத்துவது என்பதற்கு வையாபுரிப்பிள்ளை நெறி முறைகளை வகுத்திருக்கிறார். அவருடைய பதினெண் கீழ்க்கணக்குப் பதிப்பில் இதைக் காணலாம். அவருடைய பதிப்புகளில் அகராதியியல் கண்ணோட்டமும் இருக்கும். இதற்கு ‘இனியவை நாற்பது’ உதாரணம். அதில் இனியவை எவை எவை என அகரவரிசையில் கொடுத்து இருக்கிறார். மார்ரே பதிப்பிற்குகூட அவர்தான் முக்கிய காரணம்.

சி.வை.தா., உ.வே.சா., வையாபுரிப்பிள்ளை ஆகியோர் அடுத்தடுத்த வளர்ச்சி நிலைகளைக் குறிக்கின்றனர். இவர் களுக்கிடையில் நல்ல உறவு இருந்தது. ஆனால் உ.வே.சா. என் சரிதத்தில் சி.வை.தா.வைக் குறைத்து மதிப்பிடுகிறார். உ.வே.சா.விடம் மற்றவர்களை அங்கீகரிக்காத போக்கு ஒன்று இருந்தது. இதற்கு வையாபுரிப்பிள்ளை சமாதானங்கள் கூறியிருக்கிறார்.

மர்ரே எஸ்.இராஜம் பதிப்பு பற்றி...

மர்ரே எஸ்.இராஜம் பதிப்பு ஒரு செய்யுளை எளிமை யாகப் படித்துக் கொள்வதற்கான பதிப்பு. அதனுடைய நோக்கமும் அதுதான். உரைநடை பெருமளவுக்கு வளர்ச்சி யடைந்துவிட்ட காலத்தில், வாசகர்கள் தங்கள் சொந்த முயற்சியிலேயே பழைய இலக்கியங்களைப் பயில் வதற்கான வாய்ப்பை உருவாக்குவதே அந்தப் பதிப்பின் அடிப்படை. அந்தப் பதிப்பில் முக்கியமான விசயம் ஒரு நல்ல பதிப்புக்குழு இருந்தது. அக்குழுவினர் தேர்ந்தெடுத்த பாடங்களைத் தந்திருக்கின்றனர்; சுருக்கமான, தெளிவான நல்ல முன்னுரை எழுதி இருக்கின்றனர். மர்ரே எஸ்.ராஜம் பதிப்பு ஒரு முக்கியமான பதிப்பு.

பழைய பதிப்புகளை எப்படி மீளக் கொண்டுவர வேண்டும்?

பழைய பதிப்புகளை அப்படியே நிழற்படப் பதிப்புகளாக மீளக் கொண்டுவர வேண்டும். தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் முன்பு அப்படிச் செய்தார்கள். அச்சுக்கோத்துக் கொண்டு வருவதென்றால் எந்த மாற்றமும் செய்யாது கொண்டுவர வேண்டும். அதற்கு நிழற்படப் பதிப்புதான் சரியாக இருக்கும். இன்னொரு பிரச்சினை இருக்கிறது. இப்போது உ.வே.சா. பதிப்பை மீளக் கொண்டு வருவது என்றால், உ.வே.சா. வாழ்ந்த காலத்தில் இறுதியாகக் கொண்டு வந்த பதிப்பையே நிழற்படப் பதிப்பாகக் கொண்டுவர வேண்டும். அவருக்குப் பிறகு உ.வே.சா. நூலகம் கொண்டு வந்த பதிப்புகளிலேயே மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. அதனால் உ.வே.சா. வாழ்ந்த காலத்து வந்த கடைசிப் பதிப்பு முக்கியமானது. அதைத்தான்

கொண்டுவர வேண்டும். அப்படிக் கொண்டு வருவது பதிப்பு வரலாற்றுக்கும் முக்கியமானதாக இருக்கும்.

தமிழ் மரபு அறக்கட்டளை

பதிப்பாசிரியர் பேராசிரியர்.எஸ்.வையாபுரிப்பிள்ளை

https://www.tamilheritage.org/manulogy/radha/vaiya.html

வணக்கம்

இந்த சிறப்புப் பகுதியில் பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளை (1891 - 1956) அவர்களின் தமிழ் ஆய்வுச் செய்திகள் சேர்க்கப்பட்டுள்ளன.



தமிழ் நூற்பதிப்புத் துறையில் சிறந்த பதிப்பாசிரியராக விளங்கியவர். தமிழில் சிறந்த புலமை உள்ளவர்; ஆய்வுக கட்டுரையாளர், திறனாய்வாளர், கால மொழி ஆராய்ச்சியாளர், மொழி பெயர்ப்பாளர், சொற்பொழிவாளர் கதை கவிதைகள்

புனையும் திறம் படைத்தவர் என பல்முக பரிமாணங்களைக் கொண்டவர்.



இவர் 1922 முதல் ஓலைச்சுவடிகளிலிருந்து புதிதாகவும், முன்னரே பதிப்பு செய்யப்பட்ட நூல்களிலிருந்து மறுபதிப்பாக்கமும் செய்யும் தமிழ்ப்பணியை மேற்கொண்டிருந்தார். 1922ம் ஆண்டில் முதன் முதலாக இவர் பதிப்பித்த நூல் மனோன்மணீயம்.

பேராசிரியரின் தமிழ் பணி குறித்த தகவல்களை பேராசிரியரின் பேத்தியும், திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக தமிழ்த்துறை தலவருமான பேராசிரியர் முனவர் ராதா செல்லப்பன் வழங்கியுள்ளார்கள். இவர் வழங்கிய பல தகவல்கள் ஒலிக்கோப்புகளாக இப்பக்கத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த ஒலிப்பதிவுகள் 01.12.2007 அன்று பதிவு செய்யப்பட்டன. பேராசிரியர் முனவர் ராதா செல்லப்பன் அவர்களை தமிழ் மரபு அறக்கட்டளைக்காக பேட்டி கண்டவர் முனைவர். சுபாஷிணி.

பேட்டி ஒலிக் கோப்புகள்



பேராசிரியர் முனவர்.ராதா செல்லப்பன்

பாகம் 01- வாழ்க்கை சரித்திரம், குடும்பம், வகித்த பொருப்புக்கள், தமிழ் ஈடுபாடு.

பாகம் 02 - தமிழறிஞர்களுடனான தொடர்பு, பாரதியார் சந்திப்பு, சிறப்பு பண்புகள், ஆய்வில் நாட்டம்

பாகம் 03 - தமிழ் மொழி செயல்பாடுகள், தமிழ் பேரகராதி, சொல்லாராய்ச்சி, பதிப்புக்கள்.

பாகம் 04- புரத்திரட்டு நூல்கள் பதிப்பாக்கங்கள், தொடர் தமிழ் ஆய்வுகள், வகித்த பொறுப்புக்கள், சங்க இலக்கிய சொல்லடைவு பணிகள்.

பாகம் 05- இலக்கிய ஆர்வம், ஆய்வுத் திறம், உ.வே.சா பற்றிய கருத்துக்கள், ஆற்றிய சொற்பொழிவுகள் மற்றும் இலக்கிய உரைகள், மொழி கோட்பாடுகள்.

பாகம் 06- இலக்கிய படைப்புக்கள், சிறுகடைகள், கவிதகள், தமிழ் இலக்கிய கால ஆராய்ச்சிகள், திறனாய்வுப் பணிகள், திராவிட மொழி ஆய்வுகள்.

பாகம் 07- பிற மொழி இலக்கிய ஆய்வுகள், மொழி பெயர்ப்புக்கள், முதல் பதிப்பு, மற்ற பிற பதிப்புக்கள், தமிழ் அகராதி மற்றும் நிகண்டு பற்றிய செய்திகள்.

பாகம் 08- ஒப்பிலக்கிய ஆய்வுகள், அகராதி ஆய்வுகள் பட்டியல்களின் தேவைகள், நிகண்டுகள் பற்றிய மேலும் பல செய்திகள், தமிழ் அகராதியில் ஆதார நூல் தொகுதிகள், எழுதி வெளியிட்டுள்ள வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரைகள்.

பாகம் 09- மொழிகள், வட மொழி பற்றிய கருத்துக்கள், ஆங்கில மோகம் பற்றிய கருத்து.

பாகம் 10- பயிற்று மொழி சிந்தனை, தமிழ் மொழியே பயிற்று மொழி, தமிழின் வழி அறிவியல் கல்வியின் தேவைகள், கவிமணியோடு நட்பு, பிற நூற்களுக்கு வழங்கிய முன்னுரைகள் பற்றிய செய்தி, இலக்கியமும் சமூகமும்.

பாகம் 11- தமிழ் மொழி எதிர்கால ஆய்வு பற்றிய கணிப்பு.

எழுதிய நூல்கள்

1930 - ஆராய்ச்சி உரை தொகுப்பு, ஆசிரியர் வெளியீடு.
1944 - சிறுகதை மஞ்சரி, தினமணி வெளியீடு.
1946 - Research in Dravidian Language, Madras Premier Co., Madras.
1947 - இலக்கியச் சிந்தனைகள், பாரி நிலையம்.
1949 - தமிழர் பண்பாடு, தமிழ்ப் புத்தகாலயம்.
1950 - கம்பன் ஆராய்ச்சிப் பதிப்பு, கம்பன் கழகம், காரைக்குடி.
1951 - உரைமணிமாலை, ஆசிரியர் பதிப்பு.

1952 - இலக்கிய தீபம், பாரி நிலையம்.
1952 - இலக்கிய உதயம் (பகுதி 2), தமிழ்ப் புத்தகாலயம்.
1954 - இலக்கிய மணிமாலை, தமிழ்ப் புத்தகாலயம்.
1955 - கம்பன் காவியம், தமிழ்ப் புத்தகாலயம்.
1956 - இலக்கணச் சிந்தனைகள், பாரி நிலையம்.
1956 - திராவிட மொழிகளில் ஆராய்ச்சி, தமிழ்ப் புத்தகாலயம், இரண்டாம் பதிப்பு.
1956 - History of Tamil Language & Literature, NCBH
1956 - சொற்கலை விருந்து, பாரி நிலையம்.
1957 - காவியகாலம், தமிழ்ப் புத்தகாலயம்.
1958 - இலக்கிய விளக்கம், தமிழ்ப் புத்தகாலயம்.
1958 - ராஜி
1959 - தமிழ்ச் சுடர்மணிகள், பாரி நிலையம், மூன்றாம் பதிப்பு.
1959 - அகராதி நினைவுகள், தமிழ்ப் புத்தகாலயம்.
1960 - தமிழின் மறுமலர்ச்சி, பாரி நிலையம், நான்காம் பதிப்பு.

பதிப்பித்துள்ள நூல்கள்

1. மனோண்மணியம், 1922.
2. துகில்விடு தூது, 1929.
3. நாமதீப நிகண்டு, 1930.
4. அரும்பொருள் விளக்க நிகண்டு, 1931.
5. களவியற்காரிகை, 1931.
6. கம்பராமாயணம்-யுத்த காண்ட1-3 படலம்), 1932.
7. குருகூர் பள்ளு, 1932.
8. திருக்குருங்குடி அழகிய நம்பி உலா, 1932.
9. தினகர வெண்பா, 1932.
10. நெல்விடு தூது, 1933.
11. தொல்காப்பியம்-(பொருளதிகாரளம, இளம்ப்பூரணம்), 1933.
12. திருமந்திரம் (சேர்ந்து பதிப்பித்தது), 1933.
13. திருமுருகாற்றுப்படை (சேர்ந்து பதிப்பித்தது, புதிய உரையுடன்), 1933.
14. கம்பராமாயணம்-பால காண்டம் (1-7படலம்), 1933.
15. பூகோள விலாசம், 1933.
16. திருப்பணி மாலைகள் (தென்திருப்பேரை,

திருக்கோளூர்),1933.
17.மூப்பொந்தொட்டி உலா, 1934.
18.பொதிகை நிகண்டு, 1934.
19.இராஜராஜதேவர் உலா, 1934.
20.தொல்காப்பியம்-பொருளதிகாரம் (நச்சினார்க்கினியம்),1934.
21.இராமலிங்கேசர் மீது பணவிடு தூது, 1934.
22.மதுரைக் கோவை, 1934.
23.தெய்வச்சிலையார்விறலிவிடு தூது, 1936.
24.புறத்திரட்டு, 1938.
25.கயாதாரம், 1939.
26.சங்க இலக்கியபத்துப் பாட்டும் எட்டுத் தொகையும்), 1940.
27.சீவக சிந்தாமணி, 1941.
28.சாத்தூர் நொண்டி நாடகம், 1941.
29.நவநீதப் பாட்டியல்-உரையுடன், 1943.
30.திருமுருகாற்றுப்படை-பழைய உரை, 1943.
31.நான்மணிக்கடிகை, 1944.
32.இன்னா நாற்பது, 1944.
33.திரிகடுகமும் சிறுபஞ்ச மூலமும், 1944.
34.இனியவை நாற்பது, 1949..
35.இராமப்பய்யன் அம்மானை, 1950.
36.முதலாயிரம், 1955.
37.திருவாய்மொழி.
38.கொண்டல் விடு தூது.

** முனைவர் ராதா செல்லப்பன் அவர்களின் "ஆய்வு நெறியும் வையாபுரியும்" எனும் நூலிலிருந்து தொகுக்கப்பட்டவை.

காணொளிகள்

01] பேரா.எஸ் .வையாபுரிப் பிள்ளை \ இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற முகங்கள்
https://www.youtube.com/watch?v=jLNxWWmUaEo [29:32]
02] தமிழ் கவிஞர்கள் பற்றிய குறிப்புகள்
https://www.youtube.com/watch?v=xLNBsiZuC7g [1:33:52]